றிக்கோ கோப்பியை
அரைத்து
பெற்றுக்கொள்ளவும்
நூடில்ஸ் வகைகளை
ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளவும்
றிக்கோ
870, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஐஸ்கிறீம் வகைகள்
பாலுதா சர்பத்
பொப்பே சுவீற்ஸ்
கோழி புரியாணிக்கும்
றிக்கோ
சுவீற்ஸ் அன் கிறீம்
ஹவுஸ்
870, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 12 வியாழக்கிழமை (26 – 05 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 179

# ஆயுதங்கள் வட-கிழக்கு யுத்தமுனைகளில் இருந்து கடத்தப்பட்டு கொழும்பு ஆயுதசந்தையில் விற்பனை

## 'பாதாள உலக' கிரிமினல் குழுக்கள் படையினரிடமிருந்து வாங்குகின்றன

கொழும்பு, மே 26

வடக்கு - கிழக்கு யுத்த முனைகளில் இருந்து ஆயுதங்கள், கிரனேட்கள் மற்றும் வெடிப் பொருள்களைக் கடத்துவதில் ஆயுத படையினர் பலர் ஈடுபட்டுள்ளனர் என்றும் —

அப்படிக் கடத்தப்படும் ஆயுதங்கள் கொழும்பு "ஆயுத சந்தையில்" விற்பனைக்கு விடப்படுவதாகவும் —

இவ்வாறு விற்பனை செய்யப்படும் ஆயுதங்களையே கொழும்பு மாநகரில் இயங்கி வரும் "பாதாள உலக" கிரிமினல் குழுக்கள் வாங்கி தங்கள் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுத படையினரால் மேற்கொள்ளப்படும் ஆயுதக் கடத்தலினால் "பாதாள உலக" குழுக்களுக்கு நவீன ஆயுதங்கள் போய்ச் சேருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சொத்தி உபாலி உட்பட பல 'பாதாள உலக' நபர்கள் கைதான பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் இருந்து இத்தகவல்கள் வெளியாகி இருப்பதாக இவ்விசாரணைகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள் கூறினர் என்று "த ஐலண்ட்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

"பாதாள உலக", கிரிமினல்களுக்கு எதிராக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமான முறையில் உபயோகிக்கப்பட்டு வந்த பல நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## அஸாம் தீவிரவாதிகளுக்கு விடுதலைப் புலிகள் பயிற்சி?

விடுதலைப் புலிகள் அஸாம் மாநிலத்தில் உள்ள உல்பா (ULFA) தீவிரவாதிகளுக்கு ஆயுதப்பயிற்சி அளித்ததாகவும்—

ஆனால் அப்படிப் பயிற்சி பெற்ற உல்பா தீவிரவாதிகள் பலர் சரணடைந்து விட்டதாகவும்—

அஸாம் மாநில முதலமைச்சர் ஹிதேஷ்வர் சைக்கியா கூறியிருக்கிறார்.

நேற்று சென்னையில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தானும் பங்களாதேஷும் உல்பா தீவிரவாதிகளுக்கு பெருமளவு உதவி புரிந்தன. ஆனால் இராணுவ நடவடிக்கையினால் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டனர் என்றும் அவர் சொன்னார். (ஒ-எ)

### காட்டுமிராண்டித் தனத்தில்

## றுவாண்டாவும் இப்போது ஸ்ரீலங்காவின் பட்டியலில்!

காட்டுமிராண்டித் தனத்துக்கு இருபதாம் நூற்றாண்டில் அர்த்தம் கொடுத்துவரும் அங்கோலா, ஸ்ரீலங்கா, லைபீரியா, பொஸ்னியா, நாகோர்னகரபா ஆகிய நாடுகளின் பட்டியலில் றுவாண்டாவும் இப்போது சேர்ந்துள்ளது.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் டைம் சஞ்சிகையின் மே 16 திகதிய இதழில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் உள்ள ஏனைய நாடுகளுக்கு எதிராக காட்டுமிராண்டித்தனமாக இந்நாடுகள் நடந்து வருகின்றன என்றும் 'டைம்' சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"டைம்" சஞ்சிகையின் இக்கருத்துக்கு ஆட்சேபக் குறிப்புகள் அனுப்புவதால் பிரயோசனம் எதுவுமில்லை. அது அவமானத்தை அழித்துவிடாது" — என்று 'த ஐலண்ட்' பத்திரிகையில் வாசகர் ஒருவர் எழுதிய ஆசிரியர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## அரசியலிலிருந்து ரணில் ஒதுங்குவார்?

கொழும்பு, மே 26

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது இடம்பெற்று வரும் பாரிய மாற்றங்கள் காரணமாக அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எண்ணியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்கா முன்னர் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த மாதிரி தாமும் சில காலம் அரசியலில் இருந்து ஒதுங்க ரணில் எண்ணியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

'ராவய' பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

## ஆளும் கட்சியில் பிளவு வருமாம்!

கொழும்பு, மே 26

ஐக்கிய தேசியக் கட்சியைப் புனரமைக்க அக்கட்சியின் தலைமைப்பீடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் கட்சியில் பாரதூரமான பிளவை ஏற்படுத்தும் ஆபத்தை உருவாக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவருக்கு எதிராக கட்சியில் ஒரு பிரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### காமினி பட்டபாடு எம்மாத்திரம்!

## நான் ஐ. தே. கவில் சேர மாட்டேன்!

### ஜி. எம். பிரேமச்சந்திரா கூறுகிறார்

கொழும்பு, மே 26

ஐக்கிய தேசியக் கட்சியில் தாம் சேரப் போவதில்லை என்று வடமேல் மாகாண முதலமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்திருக்கிறார்.

சண்டே ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில்—

"நான் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் நன்றாக உள்ளேன். ஏற்கனவே நான் முதலமைச்சராகி விட்டேன். காமினி திஸநாயக்கா எம். பியாவதற்கு பட்ட கஷ்டங்களைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் நேற்று குண்டு வீச்சு!

### இரவுவரை ஹெலித் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 26

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

குடத்தனை, நாகர்கோவில் பகுதிகளில் கரையோரக் குடியிருப்புக்களை நோக்கி குண்டு வீச்சு நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

புக்காரா குண்டு வீச்சு நடத்திய அதே சமயம், ஹெலி தாக்குதலும் அங்கு இடம் பெற்றதாகவும் —

நேற்றிரவு வரை அப்பகுதிகளில் ஹெலித் தாக்குதல் தொடர்ந்ததாகவும் தெரிவிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், மே 26

குடும்ப அட்டைப் பதிவுச் செயலகங்கள் அனைத்தும் இன்று முதல் அடுத்த மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை வரை திறக்கப்படமாட்டாது என்று குடும்ப அட்டைப் பகுதியினர் பொதுமக்களின் கவனத்துக்கு அறிவித்துள்ளனர்.

## ஜூன் 5 மாணவர் எழுச்சி நாள் தமிழீழம் எங்கும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே 26

ஒரு மாணவன் தன் மேம்பாட்டிலும், வளர்ச்சியிலும் தன்னை தயார் செய்யும் வகையிலும் —

சமுதாயத்தில் ஒரு மாணவன் தனது கடமையை உணர்ந்து செயற்படும் வகையிலும் —

தனது இனத்துக்கு மாணவன் ஆற்றவேண்டிய கடமை என்ன என்பதை முடிவு செய்யும் வகையிலும் —

சமுதாய புரட்சியில் மாணவனின் முடிவு என்ன என்பதை சிந்திக்கும் வகையிலும்—

அடுத்த மாதம் 5 ஆம் திகதியை மாணவர் எழுச்சி நாளாக விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்துள்ளனர்.

மேற்கண்ட தகவலை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தமிழீழ நடுவப் பணியகப் பொறுப்பாளர் திரு. எம். இன்பன் வெளியிட்டார்.

மாணவர் எழுச்சி நாள் தொடர்பாக அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இத்தகவலைத் தெரிவித்தார்.

தமிழீழ வரலாற்றில் மாணவர்களின் பங்கு முக்கியத்துவத்தை வலியுறுத்தும்வகையில் பிரகடனம் செய்யப்பட்டுள்ள இந்நாள் வருடாவருடம் அனுஷ்டிக்கப்படும் என்றும்—

மாணவர் பேரவையின் தலைவராகவிருந்த சிவகுமாரன் இறந்த நாளிலேயே இந்நாள் பிரகடனம் செய்யப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



எங்கடை பெடியளுக்கு பயந்து ... ஆயுதச் சந்தை நடத்... இருப்பினம்!......

### வடக்கு - கிழக்கை விட்டு விட்டு

## ஜனாதிபதித் தேர்தலை அரசு நடத்த முடியாத சிக்கல் நிலை

### சட்டத் திருத்தம் கொண்டு வருவதிலும் கஷ்டம்

கொழும்பு, மே 26

ஜனாதிபதித் தேர்தலை இவ்வாண்டு நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்ற போதிலும்—

அத்தேர்தலை அரசாங்கம் நடத்த முடியாத நிலையே இருப்பதாக சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கிலும், கிழக்கில் பெரும் பகுதியிலும் புலிகளே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்தப் பிரதேசங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை.

தற்போதைய சூழ்நிலையில்—

இப்பிரதேசங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது என்பது அரசாங்கத்துக்கு இயலாத காரியமாகும்.

நாட்டின் ஒரு பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தரை நிலைவரத்தை உரிய முறையில் தயார் செய்து

## வடக்கில் தேர்தலை நடத்த காமினியின் உதவி கிடைக்குமா?

### கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கேள்வி

கொழும்பு, மே 26

ஜனாதிபதி தேர்தலை ஒரே சமயத்தில் இலங்கை முழுவதும் நடத்துவதற்கு ஏதுவாக வடபகுதியில் தரைநிலைவரத்தைத் தயார் செய்வதற்கு—

இராணுவ நடவடிக்கைக்கு புறம்பாக வேறு வழிகளில் முட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது என்றும் —

அதற்கு அரசாங்கத்தில் சேர்ந்துள்ள காமினி திஸநாயக்கா உதவுவாரா என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகின்றது.

"காமினி மீண்டும் அரசில் சேர்ந்துள்ளதால் ஏற்பட்டுள்ள தாக்கம்" — என்ற தலைப்பில் பிரபாத் சகபந்து "சண்டே ஐலண்டில்" எழுதியுள்ள கட்டுரையில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில்தான்,

(6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைக்கு வவுனியாவில் படை குவிப்பு!

கொழும்பு, மே 26

வெளியிடங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் வவுனியாவில் குவிக்கப்பட்டு வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி முன்னேறுவதற்காக இராணுவம் அங்கு குவிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

வவுனியாவில் படையினர் குவிக்கப்படுவது இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு முஸ்தீபு நடப்பதையே காட்டுகிறது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் மன்னார் பகுதிகளில் இராணுவம் வாபஸ் பெறப்பட்டு அதிரடிப் பொலிஸாரிடம் அப்பகுதிகள் ஒப்படைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-த)

## தமிழீழ இலக்கை அடைவதில் தலைவர் பிரபாவின் வேட்கை!

### சிங்கள அறிஞர் பாராட்டு

கொழும்பு, மே 26

தமிழீழத்தை அடைவதில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் காட்டும் வேட்கையில் உள்ள உன்னத தூய்மையை எவரும் மறுக்க முடியாது.

— இவ்வாறு சிங்களவர் ஒருவர் தாம் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் 'த ஐலண்ட்' பத்திரிகையில் எழுதிய கட்டுரைக்குப் பதிலளித்து கனிநிதி ஹந்தெட்டுவ கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அக்கட்டுரையிலேயே அவர் தலைவர் பிரபாகரனைப் பாராட்டி இருக்கிறார்.

தமிழ் மக்களுக்காகப் பேச குமார் பொன்னம்பலத்துக்கு என்ன உரிமை இருக்கிறது.

கறுவாக்காட்டில் உள்ள உல்லாச வாசஸ்தலங்களையும், வெள்ளவத்தையில் உள்ள ஹோட்டலையும், பென்ஸ் கார்கள் அணியையும், ஹிக்கிளப்பில் விடுமுறை கழிப்பதையும் விட்டுவிட்டு பனைமரத்தின் கீழ் போய் படுத்திருக்க குமார்பொன்னம்பலம் தயாரா? —

மிருகங்கள் வாழும் காடுகளில் கூட தமது போராளிகளுடன் தங்கியிருந்து தமிழீழ நிலைத்த அடைவதில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் காட்டும் வேட்கையில் உள்ள உன்னத தூய்மையை எவரும் மறுக்க முடியாது — என்று அக்கட்டுரையில் ஓரிடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [அ-எ]

## அரசுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகள் அதிகரிப்பு

### எதிர்ப்பிரசாரத்துக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மே 26

அரசுக்கு எதிராக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மேற்கொள்ளும் பிரசாரங்களுக்கு போட்டியாக பதில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சரைக் கேட்டிருக்கிறார்.

அடுத்த ஆறு மாத காலத்தில் இருந்து ஒன்பது மாத காலம் வரை இப்போட்டிப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒருங்கிணைக்கப்பட்ட குழு ஒன்று செயற்பட வேண்டும் என்று அமைச்சர் டிரோன் பெர்னாண்டோக்கு ஜனாதிபதி அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்குழு இக்காலத்தில் இரவு பகலாகத் தொடர்ச்சியாக வேலை செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐலண்ட் மற்றும் டைம்ஸ் குறூப் பத்திரிகைகளும் சிறு வாரப் பத்திரிகைகளும் கெட்ட நோக்குடன் அரசுக்கு எதிரான பிரசாரத்தில் இறங்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியிலிருந்து ஒரு சாராரை ஓரம் கட்டுகின்றார் காமினி!

## 'சண்டே டைம்ஸ்' தகவல்

கொழும்பு, மே 26

ஜனாதிபதி விஜேதுங்கா எதிர்வரும் தேர்தல்களில், காமினி திஸநாயக்கா மற்றும் அவரது விசுவாசிகளின் ஆதரவுடன் தான் ஐக்கிய தேசியக் கட்சியை வழி நடத்தப் போகிறார் என்பது இன்று தெளிவாகி விட்டது.

'சண்டே டைம்ஸ்' இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

அக்கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஜனாதிபதி விஜேதுங்க முதலில் தமது சட்ட ஆலோசகராக இருந்த அமைச்சர் சொக்ஸியைக் கைவிட்டார்.

அந்த இடத்துக்கு சட்டமா அதிபர் திலக் மாரப்பனவை நியமித்தார்.

பின்னர் சிறிசேன கூரேயை ஐ.தே.க. பொதுச் செயலாளர் பதவியில் இருந்து அகற்றினார்.

இப்போது பிரதமர் ரணிலை ஓரங்கட்டி வருகின்றார்.

சொக்ஸி, கூரே, ரணில் மூவரும் காமினியை கட்சியில் மீண்டும் சேர்ப்பதை எதிர்த்தவர்கள்:

விஜேதுங்காவுக்காக செயல்பட்டு வருகின்றார் காமினி.

கட்சியின் விசுவாசிகள் கூட காமினி என்ன விஜேதுங்காவின் பிரதிநிதியாகச் செயல்படுகிறாரா என்று கேட்கிறார்கள்.

எப்படிப் பார்த்தாலும் இது தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

காமினி என்ன செய்து வருகிறார்?

பாடசாலையில் தம்முடன் ஒன்றாக படித்த டாக்டர் காமினி விஜேசேகரவை கூரேக்குப் பதில் கட்சியின் பொதுச்செயலாளராக்கினார்,

சொக்ஸிக்குப் பதில் தமது நண்பர் திலக் மாரப்பனவைக் கொண்டு வந்தார்.

இப்போது பிரதமர் ரணிலுக்குப் பதில் இன்னொருவரை கொண்டு வரும் தேவை காமினிக்கு நிச்சயம் இருக்கும்.

— இப்படி அந்தக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# நான் போட்டியிடுவது சாத்தியம் அல்ல!

## ஜனாபதி தேர்தல் குறித்து காமினி

கொழும்பு, மே 26

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளராக நான் நியமிக்கப்படுவது சாத்தியமானதல்ல, ஏனெனில், ஐ.தே.க வேட்பாளராக திரு. விஜேதுங்கா ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்.

காமினி திஸநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

''சண்டே ஐலண்ட்'' வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில்—''அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவேட்பாளராக நீங்கள் போட்டியிடும் சாத்தியம் உண்டா''— என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் முன் கண்டவாறு பதிலளித்தார்:

கேள்வி: எங்கள் பையன்களில் ஒருவர் என்று அமைச்சர் சிறிசேன கூரே கூறியிருக்கிறார். இது பற்றி கருத்துக்கூற முடியுமா?

காமினி: அதன் அர்த்தம் என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நிச்சயமாக சொத்தி உபாலி எனது பையன்களில் ஒருவர் அல்லர்; இது குறித்து மேலும் கருத்து வெளியிட நான் விரும்பவில்லை. (இ-எ)

# அமைச்சர் பதவிக்கு காமினி பொறுத்திருக்க வேண்டும்

அமைச்சர் பதவி பெறுவதற்கு காமினி திஸநாயக்க பொறுத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி விஜேதுங்கா தாம் விரும்பிய ஏனைய பிரமுகர்களையும் தேசியப் பட்டியல் மூலம் எம்பிகளாக நியமித்த பின்னரே காமினிக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# ரணிலின் பிரதமர் பதவிக்கு காமினியால் ஆபத்து இல்லை

## இருவரும் சந்தித்துப் பேசினர்

கொழும்பு, மே 26

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் எழுப்பப்பட்டுள்ள சமயத்தில்—

காமினி திஸநாயக்கா ரணிலைத் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாம் பிரதமர் பதவிக்கு ஆசைப்படவில்லை என்று காமினி ரணிலிடம் அப்போது தெரிவித்தார் என்று சண்டே ஐலண்ட் தகவல் வெளியிட்டிருக்கிறது.

தொடர்ந்தும் ரணிலே பிரதமராக இருப்பார் என்றும் ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

ரணிலிடம் ஜனாதிபதி இந்த உறுதி மொழியை நேரடியாகத் தெரிவித்திருப்பதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

எனினும் காமினி எம்.பியாக்கப்பட்டதில் ரணிலுக்கு அவ்வளவு மகிழ்ச்சி இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் காமினி திஸநாயக்காவுடன் நேரடி மோதலில் ஈடுபடும் எண்ணம் பிரதமர் ரணிலுக்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# நூல்களுக்கு ஒதுக்கிய நிதியை தவறாது பயன்படுத்துக!

## சனசமூக நிலையங்களுக்குக் கோரிக்கை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் - யாழ். பிரதேச செயலர் பிரிவில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியை சனசமூக நிலையங்கள் அனைத்தும் தவறாது பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இந்த நிதியை உடனடியாகப் பயன்படுத்தப்படாவிடின், இந்நிதியினை இழக்க வேண்டி நேரிடும் என்று யாழ் மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆகவே சனசமூக நிலையங்கள் அனைத்தும் தாங்கள் கொள்வனவு செய்யவுள்ள புத்தகங்களின் பட்டியல்களை உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

யாழ். பிரதேச செயலரின் பிரமாண அடிப்படையிலான நிதியில் இருந்து இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (எ)

# பதவி இழக்க வேண்டிய 5 அமைச்சர்களும் யார்?

## தீர்மானிப்பதில் ஜனாதிபதிக்கு சிக்கல்

கொழும்பு, மே 26

ஐந்து அமைச்சர்களை அமைச்சரவையில் இருந்து நீக்கும்படி ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அவரது நெருங்கிய ஆலோசகர்கள் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பதவி நீக்கம் செய்ய வேண்டிய அந்த ஐந்து அமைச்சர்கள் யார் என்பதை தீர்மானிக்கும் நெருக்கடியை ஜனாதிபதி எதிர்நோக்கியிருப்பதாக சிரேஷ்ட அரசு அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி சண்டே டைம்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

அமைச்சரவை உறுப்பினர்கள் பலர் மீது ஊழல், லஞ்சம் ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பதைத் தொடர்ந்தே பதவி நீக்கம் செய்யப்பட வேண்டிய ஐந்து அமைச்சர்களையும் அடையாளங்காண ஜனாதிபதிக்குக் கஷ்டமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊழல் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தட்டிக் கழிப்பதற்கு, ஊழல் புரிந்த அமைச்சர்களை அமைச்சரவை மாற்றத்தின் போது பதவி இழக்கச் செய்வதே ஜனாதிபதிக்கு சரியான மாற்றுவழியாக இருக்கும் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் தேர்தல்களின் போது வாக்காளர் மத்தியில் நம்பிக்கையைப் பெறுவதற்கு இதுவே ஒரே வழி என்றும் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ-எ)

### நாளை

யாழ்ப்பாணம், மே, 26

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை— தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தும் வாராந்த நிகழ்வுகளில் — நாளை வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு வல்லை சிவகுரு வித்தியாலய மாணவர்களின் பேச்சு மற்றும் பக்திப்பாடல் நிகழ்வுகள் இடம்பெறும். (உ-5)

# ஹுசேன் படுகொலையில் தப்பி ஓடிய சிப்பாய் கைது

கொழும்பு, மே 26

மாத்தளை மாநகர சபை உறுப்பினர் ரஸ்மி ஹுசேனின் படுகொலை தொடர்பாக இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய சிப்பாய் ஒருவர் இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இக்கொலை அரசியல் வாதி ஒருவரின் தூண்டுதலின் பேரில் தான் மேற்கொள்ளப்பட்டதாக அச் சிப்பாய் விசாரணையின் போது பொலீஸாரிடம் தெரிவித்தார் என்று பொலீஸ் வட்டாரங்கள் கூறின.

இக் கொலை பற்றி இரண்டு இரகசியப் பொலீஸ் குழுக்கள் விசாரித்து வருகின்றன. (இ-எ)

# பொலீஸ் கைப்பற்றிய றிவோல்வர் அரச அதிகாரி தமக்கு தந்ததாம்

## சொத்தி உபாலி கூறுகிறார்

வனாத்த முல்லையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் இருந்த றிவோல்வர் ஒன்று அரச அதிகாரி ஒருவரினால் தமக்குத் தரப்பட்டதாக சொத்தி உபாலி தெரிவித்திருக்கிறார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையைச் சேர்ந்த தென்னக்கூன் என்ற அரச அதிகாரியே அந்த றிவோல்வரைத் தம்மிடம் தந்தார் என்றும்—

ஜே. வி.பியின் நடவடிக்கை உச்சக்கட்டத்தில் இருந்த போது தரப்பட்ட அந்த றிவோல்வருக்கு, பின்னர் என்ன நடந்தது என்பது தமக்குத் தெரியாது என்றும் சொத்தி உபாலி கூறியுள்ளார்.

தென்னக்கூன் மிகமுக்கிய பிரமுகர் ஒருவரின் நெருங்கிய சகா என்றும் அவர்கள் இருவரும் தற்போது உயிருடன் இல்லை என்றும் சொத்தி உபாலி தெரிவித்திருக்கிறார்.

# சைக்கிளுக்கு முற்பணம் தாதிமார் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், மே 25

புதிய சைக்கிள்களை கொழும்பில் இருந்து பெறுவதற்காக முற்பணம் வழங்கி விட்டு காத்திருந்த யாழ். போதனாவைத்தியசாலை தாதிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

புதிய சைக்கிள்களுக்காக ஒவ்வொருவரிடம் இருந்தும் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 4ஆயிரத்து 500ரூபா பெறப்பட்டது.

தற்போது ஆறு மாதகாலத்தின் பின்னர் இப்பணம் அவர்களிடம் திருப்பிக் கையளிக்கப் பட்டுள்ளது.

சுமார் 150 தாதிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-162)

# இரு கடற்படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

கொழும்பு மே 26

இரண்டு கடற்படை உயர்நிலை அதிகாரிகள் ரியர் அட்மிரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்,

கொமாடோராக இருந்த எச். சி ஏ. ஸி. திஸ்ஸேரா, டீ கே. தஸநாயக்கா ஆகியோரே பதவி உயர்வு பெற்ற அதிகாரிகள் ஆவர்,

திஸ்ஸேரா, கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாகவும்—

தஸநாயக்கா வட பிராந்தியக் கடற்படைத் தளபதியாகவும் முன்பு பணியாற்றியிருந்தனர்.

இரு அதிகாரிகளும் கடற்படையின் பதில் தலைமை நிர்வாக அதிகாரிகளாகவும் பணியாற்றியிருந்தார்கள். கடந்த மார்ச்சில் இருந்து திஸ்ஸேராவும் ஏப்ரலில் இருந்து தஸநாயக்காவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (இ-எ)

### பாடசாலையில்

தென்மராட்சி, மே 26

பளை வேம்போடுகேணி சி. சி. த. க. பாடசாலையில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் சனி பிற்பகல் 2 30 மணிக்கு அதிபர் க. கனகராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்; பளை பிராந்திய கல்வி அலுவலர் ப. அரியரத்தினம் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். [உ-117]


பாடசாலை அபிவிருத்திச் சங்கப்

**பொதுக் கூட்டம்**

**07-06-1994**

யா/ கொக்குவில்

இராமகிருஷ்ண வித்தியாலயம்

மேற்படி பாடசாலையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகி தெரிவும் 07 - 06 - 1994 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

தவறாது பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

திருமதி கே. சுப்பிரமணியம்
அதிபர்

[சி/8332]


# நுவரெலியாவில் காமினியின் ஆதரவாளர்கள் காடைத்தனம்

## மாநகர மேயரின் ஆதரவாளர் மீது தாக்குதல்

கொழும்பு, மே 26

நுவரெலியா மாநகர சபையின் ஐ. தே.க மேயர் திருமதி நளின் திலகாஹேரத்தின் ஆதரவாளர்களின் வீடுகளை காமினி திஸநாயக்காவின் ஆதரவாளர்கள் தாக்கி வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தமது ஆதரவாளர்கள் மீதும் காமினியின் ஆதரவாளர்கள் வன்செயல்களைப் பாவிப்பதாக நளின் திலகா ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

இது பற்றி தாம் பொலீஸுக்கு அறிவித்துள்ளதாகவும் —

வன்செயல்களில் ஈடுபடுபவர்கள் காமினியின் விசுவாசிகள் என்பதற்கு ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும் திருமதி திலகாஹேரத் தெரிவித்தார்.

இத்தாக்குதல்கள் காரணமாக தமது ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற விரும்புவதாகவும் அவர் கூறினார்.

''காமினியின் கூட்டம் என் வீட்டை மட்டும் இன்னும் தாக்கவில்லை அப்படித் தாக்கினால் அவர்களுக்கு தேவையானதை நான் செய்வேன்''— என்றும் அவர் கூறினார். (இ-எ)

# தமிழர் நடத்தும் ரீ·வியைதடுக்க இலங்கை அரசு இறுதி முயற்சி

## வெளியுறவுச் செயலாளர் ஜேர்மனிக்குப் பயணம்

பொன், மே. 26

இலங்கை வெளியுறவு செயலாளர் பேர்ணார்ட் திலகரத்தினா ஜேர்மனுக்குச் சென்றுள்ளார்.

தலைநகர் பொன்னில் ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளை அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொன்னில் இலங்கைத் தமிழரான சீ. செல்வநாயகம் நடத்தும் தனியார் ஒளிபரப்பு நிலையத்தை மூடிவிடும்படி கோரவே திரு திலகரத்தின கொழும்பு அரசின் பணிப்பின் மீது ஜேர்மன் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரக அதிகாரிகளுடன் இது தொடர்பாக கொழும்பு அதிகாரிகள் நடத்தி வந்த பேச்சுவார்த்தைகள் பலனளிக்காமல் போனதை அடுத்தே திலகரத்னா இப்பயணத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# மற்றும் ஒரு பாதாள உலக தலைவர் பொலீஸில் சரண்

கொழும்பு, மே 26

இன்னொரு 'பாதாள உலக' க்கிரிமினல் குழுவின் தலைவரான தம்மிகா கடந்த வாரம் கொம்பெனித் தெரு பொலீஸாரிடம் சரணடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புறக்கோட்டை பொலீஸ் நிலையத்தில் வைத்து அவர் பொலீஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சொத்தி உபாலியின் குழுவினர் புரிந்த செயல்கள் பற்றிய திடுக்கிடும் தகவல்களை தம்மிகா விசாரணையின் போது பொலீஸாரிடம் வெளியிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்ட சிந்தக அமரசிங்காவின் சகோதரரே தம்மிகா ஆவார்.

சிந்தக கைது செய்யப்பட்ட பின்னர் சொத்தி உபாலிக் குழுவின்போட்டிக் குழுத்தலைவராகதம்மிகா நியமிக்கப்பட்டார். (இ-எ)

# மாவட்ட கோட்டா அடிப்படையில் கூடுதல் மாணவரை அனுமதிக்குக

## பல்கலைக்கழக துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 25

யாழ். பல்கலைக்கழகத்துக்கு, மாவட்ட கோட்டா அடிப்படையில் கூடுதல், மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் உயர் கல்வி அமைச்சரை மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

கொழும்பில் தங்கியிருந்த சமயம் யாழ். பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக உயர் கல்வி அமைச்சரை சந்திக்க துணைவேந்தர் முயற்சித்தார்.

அம்முயற்சி பயன் அளிக்காததால் கடிதம் ஒன்றை உயர் கல்வி [illegible] அவர் சமர்ப்பி[illegible]

அக்கடிதத்தி[illegible] விக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். பல்கலைக்கழக மருத்துவ, பௌதிக விஞ்ஞான உயிரியல் விஞ்ஞான பிரிவுகளுக்கு அனுமதிக்கக் கூடிய மாணவர்களிலும் பார்க்க குறைந்த அளவு மாணவர்களே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் யாழ். பல்கலைக்கழகம் நிதிநெருக்கடியையும், வளங்கள் வீணாகும் பிரச்சினையையும் எதிர்நோக்கி உள்ளது.

திறமை அடிப்படையில் யாழ் பல்கலைக்கழகத்துக்கு சிறுதொகை மாணவர்களே அனுமதிக்கப்படுகின்றனர்.

கூடுதலான மாணவர்கள் மாவட்ட கோட்டா அடிப்ப[illegible] னர். [illegible] யாழ். பல்கலைக்கழகத்துக்கு மேலும் ஒரு தொகுதி மாணவர்கள் மாவட்ட கோட்டாவில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும்.

வைத்தியபீடத்துக்கு 100 பேர் அனுமதிக்கக் கூடியதாக இருந்த போதும் 64 பேர் மட்டுமே அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பௌதிக விஞ்ஞான துறைக்கு 250 பேர் அனுமதிக்கக் கூடியதாக இருந்த போதும் 83பேரே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு 100பேர் அனுமதிக்கக் கூடியதாக இருந்த போதும் 43 பேரே அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இப்படி அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-3)


**கலந்துரையாடல்**

கல்வித்துறைத் தலைவர்

**பேராசிரியர் வ. ஆறுமுகம்**

அவர்களின் 60 ஆவது வயதுப் பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மணிவிழா சம்பந்தமாக 28 - 05 - 1994 (சனிக்கிழமை) பிற்பகல் 2. 30 மணியளவில் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடத்த உள்ளோம்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள விரும்புகின்ற பழைய மாணவர்கள், ஆர்வலர்கள், பெரியோர்கள் அனைவரையும் சமூகமளிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

கல்விக்கழகம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி. (31108)

நயினை தில்லை வெளி

**அருள்மிகு ஸ்ரீ டாரி அம்பாள் தேவஸ்தானம்**

**வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல்**

27 - 05 - 1994 வெள்ளிக்கிழமை பி. ப. 3 00 மணிக்கு கும்பஸ்தானம்.

9ஆம் நாள் 04 - 06 - 1994 சனிக்கிழமை காலை 7. 00 மணிக்கு வேள்வி விழா.

- ஆலயபரிபாலகர்கள்.

(7412)

ரசிகர்களின்
அன்பு வேண்டுகோளுக்கு
இணங்க

**யாழோசை இசைக்குழு**

தனது சேவையை ஆரம்பிக்கின்றது

நாளைய நிகழ்ச்சி

இடம்: புதுக்கோவில் கொக்குவில்
நேரம்: இரவு 8-30 மணி

தொடர்பு:- S. ரூபன்
94, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(31110)


**இதய அஞ்சலி**

நேற்று எம்மை விட்டுப் பிரிந்த

**நிரஞ்சலா இராசநாயகம்**

(வேம்படி மகளிர் கல்லூரி, வர்த்தகப் பிரிவு 92 ஆம் ஆண்டு மாணவி)

அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நண்பர்கள்
வேம்படி மகளிர் கல்லூரி

[சி8333]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிமாவோவுக்கு ஹேமா மலர்க்கொத்து

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஹேமா பிரேமதாஸா மலர்க்கொத்து அனுப்பி வாழ்த்துத் தெரிவித்தார் என்று அறிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் குடல் இறக்க அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட திருமதி பண்டாரநாயக்கா சுகமடைந்து வருவது தெரிந்ததே.

அவர் விரைவில் சுகமடைய வேண்டும் என்று வாழ்த்தியே ஹேமா பிரேமதாஸா மலர்க்கொத்து அனுப்பியிருந்தார்.

# சொத்தி உபாலியுடன் தொடர்பு இல்லை

## சிறிமாவோ மறுப்பு

கொழும்பு, மே 26

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 'பாதாள உலக'க் குழுவின் தலைவர் சொத்தி உபாலிக்கும் தமக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவதை எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா மறுத்துள்ளார்.

சொத்தி உபாலியின் சகோதரர் இந்திரபாலா ஸ்ரீமாவோவின் மெய்ப்பாதுகாவலராக இருந்தார் என்று அமைச்சர் சிறிசேனகூரே பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

''இது ஆதாரமற்றது. இந்திரபால என்ற பெயரில் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் ஸ்ரீமாவோவின் பாதுகாப்புப் பரிவில் இருந்தது இல்லை'' என்று எதிர்க்கட்சித் தலைவியின் செயலாளர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# றொனி, ருக்மனை எம். பியாக்கும் முயற்சியில் முன்னேற்றம் இல்லை

## தேசிய பட்டியல் எம். பிக்கள் பதவி விலக மறுத்து பிடிவாதம்

கொழும்பு, மே-26

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மேலும் நான்கு அரசியல்வாதிகளை தேசியப் பட்டியல் மூலம் எம். பிக்களாக்க ஆளும் கட்சி எடுத்து வந்த முயற்சி நேற்று வரை பலிதமாகவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ. தே. க தேசியப் பட்டியல் எம். பிக்கள் ராஜினாமாச் செய்ய தொடர்ந்து மறுத்து வருவதால் இந்த இக்கட்டான நிலை தோன்றியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ராஜினாமாச் செய்யும்படி ஜனாதிபதியால் கோரப்பட்ட நான்கு தேசியப்பட்டியல் எம் பிக்களும் நேற்று நண்பகல் வரை தங்கள் நிலையை உறுதிப்படுத்தவில்லை என்று கட்சியின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் றொனி டிமெல், வடமேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் காமினி ஜயவிக்ரம பெரேரா, ருக்மன் சேனநாயக்கா, பிரபல சட்டத்தரணி ரஞ்ஜித் அபயசூரிய ஆகியோரை எம்பிகளாக நியமிப்பது அவசியமாக உள்ளதென ஐ. தே. க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் குறிப்பிட்ட நான்கு எம். பிக்களின் செயற்பாடு குறித்து ஜனாதிபதி பதற்றமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நான்கு எம். பிக்களை ராஜினாமாச் செய்ய வைப்பதற்கு புதிய உத்தியைத் தேட வேண்டிய நிலை ஐ. தே. க. தலைமைத்துவத்திற்கு ஏற்பட்டிருப்பதாக கட்சி அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

ராஜினாமாச் செய்யும்படி ஜனாதிபதி கேட்டதும் அந் நால்வரும் பதவி விலகியிருக்க வேண்டும் என்றும் —

அப்படிச் செய்யாத இவர்களுக்கு கட்சிக்குள் எவ்வித எதிர்காலமும் இல்லை என்றும் அவ்வதிகாரிகள் குறிப்பிட்டனர்.

பதவி விலக மறுக்கும் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து கட்சித் தலைமைப்பீடம் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பதவி விலகுவது குறித்து கட்சித் தலைமையுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக, ஜனாதிபதியைச் சந்தித்த நியமன எம். பி. ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அந்த எம். பியுடன் மேலும் பேசுவதற்கு எதுவும் இல்லை என்று கட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

பதவி விலகும் எண்ணத்தைத் தாங்கள் கொண்டிருக்கவில்லை என்று நியமன எம். பிக்கள் தங்களின் நெருங்கிய சகாக்களிடம் தெரிவித்திருப்பதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ-6)

# தேசிய பட்டியல் எம். பிக்கு கொலைப் பயமுறுத்தல்

கொழும்பு, மே 26

ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பி. காலிங்க ஓபேவன்ஸவுக்கு கொலைப்பயமுறுத்தல் புதிதாக விடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ராஜினாமாச் செய்யும்படி ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து தினமும் தொலைபேசி மூலம் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக திரு. ஓபேவன்ஸ தெரிவித்துள்ளார்.

''எம்.பி பதவியை ராஜினாமாச் செய்யாவிட்டால் கொல்லப்படுவீர்'' என்று ஆண்குரல் ஒன்று தொலைபேசி மூலம் பயமுறுத்தி வருவதாக அவர் கூறினார்.

''நான் ஏன் ராஜினாமாச் செய்ய வேண்டும்? பயமுறுத்தலுக்கு நான் அஞ்சவில்லை. வேறு ஒருவருக்கு நாடாளுமன்றத்தில் இடமளிப்பதற்காக நான் பதவி விலகப் போவதில்லை'' — என்றும் அவர் கூறினார். (இ-எ)


# புலிகளின் குரல் வானொலியில்

26 - 05 - 1994

வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்

★ 8-10 — உரை — ''பெண்களே அணிதிரளுங்கள்''

★ 8-20 — உழைப்போம் உயர்வோம் ''எண்ணத்தைத் தாண்டிய என் விக்கை'' சித்திரம்

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — ஒப்பரேசன் லிபரேசன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''அழியாத கோலங்கள்''

27 - 05 - 1994

வெள்ளி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்

★ 7-15 — விடுதலை கானங்கள்

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்


★ 7-40 — தொடர்ந்து விடுதலை கானங்கள்


# தோற்கும் என்பதற்காக ஐ தேகவை கைவிடமுடியாது என்கிறார் தொண்டா

கொழும்பு, மே 26

எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடையும் என்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியை நான் கை விட முடியாது —

அமைச்சரும் இ. தொ. கா. தலைவருமான எஸ். தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார். (இ-எ)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

டாக்டர்

**அம்பலவாணபிள்ளை வைத்தியலிங்கம்**

(பாலாவோடை, காரைநகர்)

பிறப்பு: 09 – 02 – 1922

இறப்பு: 26 04 – 1994

தாயும் ஆவான் தந்தையும் ஆவான்
தரணியாளும் மன்னவன் போல
ஆயும் அறிவும் அடக்க முடையோன்
ஆன்று அவிந்த ஞானியர் போல
நோயிலும் பிணியிலும் நேர்த்திகள் செய்வோன்
மாட்சிமையுள்ள மருத்துவனாகி
நேயம் மிக்கோன் நேரிய சொல்வோன்
நாடிடும் நல்ல நண்பரைப் போல
தோயும் புகழ்க்கு ஈடிணையற்றோன்
தொல்குலத்துதித்த தோன்றலேயாகி
காயும் மனது கடுகளவற்றோன்
கனிந்த குரலும் கருணையும் கொண்டோன்
குனிந்த சென்னியும் கொள்கையும் உடையோன்
தணிந்த நடையும் தாவும் தாங்கியோன்
கனிந்த மொழியும் பரிவும் பகர்வோன்
வாழ்ந்து முடிந்த வைத்தியலிங்கமே
ஆழ்ந்த அஞ்சலி சேர்த்து நிற்கின்றோம்.

நண்பர்கள்

மா. தயானந்தன் குடும்பம்,
செ. அம்பிகைபாகன் குடும்பம்,
செல்வி பரமேஸ்வரி வீரகத்திப்பிள்ளை,
யாழ்ப்பாணம்.

(31086)

# வீட்டுக்கிருத்திய சபிண்டிகரணக் கிரியை அழைப்பு

நிகழும் பவ வருடம் சித்திரை மாதம் 13ஆம் நாள் (26 - 04 - 94) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணிக்கு சிவபதம் அடைந்த, காரைநகர், பாலாவோடையைச் சேர்ந்த

**ஸ்ரீமான் டாக்டர் அ. வைத்தியலிங்கம்**

அவர்களின்

வீட்டுக் கிருத்திய சபிண்டீகரணக் கிரியைகள் வைகாசி மாதம் 12ஆம் நாள் இன்று (26 - 05 - 94) வியாழன் காலை 11-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
இல. 4, செட்டித்தெரு, நல்லூர்.

29 - B, ஜெகநாதன் தெரு,
லக்ஷ்மண பெருமாள் நகர்,
கொட்டிவாக்கம், சென்னை - 41.

(31085)

## "புலிகள் கொன்றார்கள் என்பதை ஏற்க முடியாது"

# பிரேமாவின் மகளின் கூற்றினால் ஐ. தே. க. வட்டாரங்களில் அதிர்ச்சி

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவை விடுதலைப் புலிகள்தான் கொலை செய்தனர் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ளத் தயார் இல்லை என்று அவரது மகள் துளாஞ்சலி கூறியிருப்பது, ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள பிரேமதாஸா எதிர்ப்பு அணியினர் மத்தியில் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியிருப்பதாகச் சொல்லப்படுகின்றது:

இதே வேளை —

பிரேமதாஸாவுடன் நெருங்கிப்பழகியவரும் பிரச்சினைக்குரிய அரசியல் வாதியுமான ஒருவர் தமது பெயரைப் பகிரங்கப்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையுடன் சண்டே ஐலண்டுக்கு மேதினப் படுகொலை பற்றி பல தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

பிரேமதாஸா படுகொலை பற்றி விசாரணை ஒன்று நடத்தப்படுமானால் தாமும் தம்முடன் உள்ள சிலரும் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

அந்த அரசியல்வாதி மேலும் சொன்னதாவது:

லலித் அத்துலத்முதலியின் படுகொலை பற்றி பொலீஸார் அளித்த தகவல்கள் பிரேமதாஸாவுக்குத் திருப்தி அளிக்கவில்லை.

லலித் கொலை செய்யப்பட்டதற்கு மறுதினம் பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒருவர் பிரேமதாஸாவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு லலித்தைக் கொலை செய்தவரின் சடலமும், அவரது அடையாளக் கார்டும் கிரிலப்பனையில் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவித்தார். அதனைக்கேட்டு பிரேமா சிரித்தார்.

ஸ்ரீகோதாவில் இருந்து பிரேமாவுடன் நான் காரில் திரும்பிக் கொண்டிருந்தபோது பிரேமா இதனை எனக்குத் தெரிவித்தார்.

''இந்த பொலீஸ்காரர்கள் என்னை ஒரு மடையன் என்று நினைத்துவிட்டார்கள். கொலைகாரன் தனது அடையாளக் கார்டை எடுத்துச்சென்று அதை கொலை நடந்த இடத்தில் விட்டுச்சென்றான் என்பதைநம்பமுடியுமா?'' -என்று பிரேமா என்னைக் கேட்டார்.

லலித் படுகொலை செய்யப்பட்டதால் பிரேமா குழப்பமடைந்திருந்தார்.

இதுகுறித்து ஏப்ரல் கடைசியில் சிலதகவல்களை பிரேமா எதிர்பார்த்து இருந்தார் அதனால்தான் அவர் மே முதலாம் திகதி சில தகவல்களை பகிரங்கப்படுத்தப் போவதாகக் கூறியிருந்தார்.

மேதினம் அன்று காலை 8-30 மணிக்கு பிரேமா ஒரு கடிதத்தில் கைபெழுத்திட்டார். மர்மமான சம்பவங்களைத் துப்புத்துலக்குவதில் பிரபலமான உயர்நிலை பொலீஸ் அதிகாரிக்கு சேவை நீடிப்பு வழங்குவதாக அக்கடிதம் அமைந்திருந்தது ஐந்து நாள் கழித்து அந்தப் பொலீஸ் அதிகாரி சேவையில் இருந்து நீக்கப்பட்டார்.

லலித் கொலை தொடர்பாக முக்கிய தகவலை மேதினமன்று பிரேமா வெளியிடவிருந்தார் என்பது நிச்சயமானதாக இருந்தது. ஆனால் அந்த சந்தர்ப்பம் அவருக்கு கொடுக்கப்படவில்லை —

இப்படி பிரேமாவின் நெருங்கிய சகா கூறினார் (இ-எ)

# பாஸ்கரலிங்கத்திற்கு பியோன் பதவிகூட வழங்க மாட்டேன்

## றொனி டி மெல் கூறுகிறார்

கொழும்பு, மே 26

நான் மீண்டும் நிதி அமைச்சரானால் பாஸ்கரலிங்கத்தையோ, அவரது உதவியாளரையோ பியோன்களாகக் கூட எனது அமைச்சில் நான் வைத்திருக்கமாட்டேன்:

முன்னாள் நிதி அமைச்சரான றொனி டி மெல் கடந்த வாரம் கொக்கலையில் நடைபெற்ற ஜேசீஸ் அமைப்பின் கூட்டம் ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

'உரிய நேரம் வருவதற்கு முன்னர்' இவ்வாறு அவர் பகிரங்கமாக தெரிவித்ததன் காரணமாக, அவருக்கு எம். பி பதவி உடனடியாகக் கிடைக்கும் வாய்ப்பு இப்போது குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## நிதி அமைச்சுக்கு

# நிரந்தர செயலாளர் இல்லாத நிலை

கொழும்பு, மே 26

நிதி அமைச்சுக்கு நிரந்தர செயலாளர் ஒருவர் இல்லாத நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நிதி அமைச்சுச் செயலாளர், திறைசேரிச் செயலாளர் பதவிகளை வகித்து வந்த ஆர். பாஸ்கரலிங்கம் தற்போது சுயீன விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளார்.

அவர் ஒய்வு பெறலாம் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் — பதில் செயலாளராக எஸ். வி. கே. கே. வெரகொட நியமிக்கப்பட்டார். அவரும் அமெரிக்கா சென்று விட்டார்.

இந்த நிலையில் இரண்டாவது பதில் செயலாளரான திரு கே. சண்முகலிங்கம் மணிலாவில் ஆசிய வளர்ச்சி வங்கிக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ளார். அவரும் கண் சிகிச்சை பெற வேண்டும் என்ற காரணத்தைக் காட்டி விரைவில் ஒய்வு பெறலாம் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதி திறைசேரிச் செயலாளர் தயாலியனகே நிதி அமைச்சின் 3 ஆவது பதில் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நிரந்தர [illegible] இந்த அமைச்சுக்கு நிரந்தரச் செயலாளர் ஒருவரும் இல்லாத கஷ்டம் ஏற்பட்டு[illegible] [illegible]

# கழுத்தறுப்பு வேலைக்காக பதவி ஏற்கவில்லை

கொழும்பு, மே 26

கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபடுவதற்காக தாம் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை ஏற்கவில்லை என்று டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்தார்.

கழுத்தறுப்பு நடவடிக்கையில் தமக்கு அனுபவமும் இல்லை என்றும் சொன்னார். (இ—எ)


கோண்டாவில் கிழக்கு

**ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு**

15-05-1994 முதல் 26-05-1994 வரை தொடர்ந்து 12 நாட்களும்

கந்தபுராணத் தொடர் விரிவுரை நிகழ்த்திய சிவநெறித் தொண்டர்

திரு. செ. சத்தியமூர்த்தி M. A அவர்கள்

இன்று (26-05-94) வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு பாராட்டி கௌரவிக்கப்படுவார்.

பாராட்டுரை வழங்குபவர்கள்:-

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்)
கவிஞர் திரு. சோ. பத்மநாதன்
(உப அதிபர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(7410) — பரிபாலன சபை.



**மணிமேகலை சனசமூக நிலையம்**

சண்டிலிப்பாய்.

# அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு - 3897

2ஆம்பரிசு - 4330 3 ஆம் பரிசு - 0202

ஆறுதல் பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 1. 0036 | 2. 1002 | 3. 4350 |
| 4. 4960 | 5. 3452 | 6. 0398 |
| 7. 2641 | 8. 0359 | 9. 0514 |
| 10. 1616 | | |

பரிசுக்குரியவர்கள் தமக்குரிய பரிசுகளை 10-06-94 க்கு முன்னர் கிழமை நாட்களில் காலை 8-00 – 12-00 மணிக்கிடையில் மணிமேகலை சிறுவர் அறிவாலயத்தில் பரிசுச் சீட்டைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளவும்.

ஆதரவுக்கு நன்றி;

செ. இளமுருகன் தலைவர்

க. திருச்குமார் செயலாளர்

(7211)


**ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்**

# கண்ணீர் அஞ்சலி

22-05-94 இல் விமானக் குண்டுவீச்சின்போது அகாலமரணமடைந்த நீர்வேலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் பிரிவால் இன்னலுறும் குடும்பத்தினருக்கும், நீர்வேலி ப. நோ. கூ. சங்க பணிப்பாளர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்களும்,
பொதுச்சபை உறுப்பினர்களும்.
பணியாளர்களும்.

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்.

(சி-8233)

**பொன் கொடுத்துப் பொருள் கொடுத்து பெண்ணே! பின்னும் நீ அடிமை தானே!**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சந்தோர் மேசை, கண்ணாடி சோக்கேஸ், அலுமாரி, ட்ரெஸிங் ரேபிள், மேசை, கம்பளம், ஜெனரேட்டர் தொடர்பு: ஸ்ரீபரமேஸ்வராச்சந்தி (குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில்), திருநெல்வேலி. (31091)

### பஞ்சாங்கக் கையேடு

சுபநேர சுபகரும நாள் கோள் நற்பலன்கள் 1994 ஜனவரி முதல் டிசம்பர் வரை. ஆக்கம்: எஸ். தெய்வநாயகம் B. A. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். 40/- வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு பூபாலசிங்கம் பொத்தக நிலையம். (இ-8215)

### மணமகன் தேவை

யாழ். இந்து, வயது 27 உடைய யாழ். அழகிய, படித்த, நற்குணமுள்ள பெண்ணுக்கு உயர் தொழில் பார்க்கும் வரன் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சீதனம் வழங்கப்படும். 649, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (31068)

### மணமக்களே!

உங்கள் திருமணத்திற்கான சிறந்த அழைப்பிதழ்களைத் தெரிவு செய்திட வாரீர். ஆனந்தன் புத்தக நிலையம், 21/B. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (30975)

### தவறிவிட்டது

19-05-94 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கும் 7 மணிக்கும் இடையே கண்டி றோட் கைதடியில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கும், கனகம்புளியடிச் சந்திக்கும் இடையே 2½ பவுண் தங்கச் சங்கிலி தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மே/பா 33, உதயன் சேவை நிலையம், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (7208)

### பயிற்சி வினாத்தாள்கள்

A/L, O/L ஆண்டு 5 புலமைப்பரிசில் 3, 4, 5, 6, 7, 8, 9, 10 வகுப்புகளுக்கான ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்ற பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், புத்தகசாலைகள், ஆசிரியர்களுக்கு விசேட கழிவுண்டு. Bond, யாழ்ப்பாணம். (7365)

## கலைப்பீட மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 8மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இதில் அனைத்து கலைப்பீட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரி உள்ளது. (இ-162)

## தென்மராட்சியில் அகதிகளுக்கு முப்பது வீடுகள்!

தென்மராட்சி, மே 26

கச்சாய் கோமர் காட்டி தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினர் முப்பது வீடுகளை அமைத்துள்ளனர்.

இவ் வீடுகள், மாதகல் மற்றும் இலவாலைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. (எ-117)

## செம்பியன்பற்று உற்சவ விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம், மே 26

செம்பியன்பற்று கிறிஸ்தவ ஆலய ஆண்டு உற்சவத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு சிற்றூர்தி சேவை சங்கத்தால் 24ஆம் திகதி முதல் இன்று 26 ஆம் திகதி வரை விசேட போக்குவரத்து சேவைகள் நடத்தப்படுகின்றன.

இதற்கான நேர அட்டவணையை யாழ். மத்திய பஸ் நிலையத்திலும் பருத்தித்துறை பஸ் நிலையத்திலும் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (இ)

## உடற்கல்வி கற்கைநெறி

யாழ்ப்பாணம், மே 26

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் அடுத்தமாத முதல் வாரத்தில் உடற்கல்வியும் விளையாட்டுக்களும் பற்றிய இருமாதகால அடிப்படைக் கற்கைநெறி ஒன்று இடம் பெறவுள்ளது.

இதில் பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளின் உடற்கல்வியைப் பயிற்றுவிப்பவர்களும் சனசமூக நிலையங்கள் ஊடாக சாதாரண பொதுமக்களுக்கு உடற்கல்வியைப் பயிற்றுவிக்க ஆர்வம் கொண்டவர்களும் பங்கு கொள்ளலாம் என்று அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார் [ஓ]

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடத்தும்

## கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும், கிராமிய ஆட்ட கலை விழாவும்

05-07-1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அமைப்புக்கள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை ஈழ வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக செயலகங்களில் 02-06-1994 க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

### அரங்க வகைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக் கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

### பொது அறிவுறுத்தல்கள்

1. கலை வடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளை யொட்டியதாகவும், கலை யம்சம் நிறைந்ததாகவும் எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்.)
3. (அ) சிறந்த நடிகர
   (ஆ) சிறந்த நடிகை
   (இ) சிறந்த நெறியாள்கை
   (ஈ) சிறந்த எழுத்துரு
   (உ) சிறந்த இசையமைப்பு
   (ஊ) சிறந்த வேடப்புனைவு
   என்பவற்றிற்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

### சிறுவர் அரங்கு

சிறுவர்களின் வயதிற்கும் உளவளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமைய வேண்டும். அத்துடன் நாடக அளிக்கையில் சிறுவர்களே பங்குகொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக் கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

### பொது அறிவுறுத்தல்கள்

(அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரை உள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்.

(ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 20 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும். 2 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும். (5 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

(ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்.

(உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லையை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.

(ஊ) நாடக அளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்

1. கோலாட்டம்
2. கரகம்
3. ஆட்டக்காவடி
4. கும்மி

### பொது அறிவுறுத்தல்கள்

(அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

✻ குறிப்பு

(அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

(ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

(இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுப்பேற்க வேண்டும். மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்.

(ஈ) மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப் பணியகம்,
தமிழீழம்.


## பாராட்டுகிறோம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலய மஹோற்சவ விழா இன்று 26-05-94 வைரவ சாந்தியுடன் முடிவடைகிறது. இம் மஹோற்சவத்தை சிறப்பாக நடத்திய பிரதமகுரு சிவஸ்ரீ ஆறுமுகக் குருக்கள் அவர்கள் மற்றும் ஆலயப்பூசகர் ஸ்ரீலஸ்ரீ இரவீந்திரராசா ஐயா அவர்கள் ஆகியோரின் திருத்தொண்டைப் பாராட்டுவதுடன், எமது நன்றியைக் கூறி அவர்களின் பணி என்றும் தொடர வாழ்த்துகிறோம்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

(7411) - கோண்டாவில் வாழ் மக்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



புங்குடுதீவு 10ஆம் வட்டாரம்

### அமரர் கந்தையா நடேசு

(முன்னை நாள் கொழும்பு கொள்ளுப்பிட்டி "கருணா ஸ்ரோர்ஸ்" பிரபல வர்த்தகர்)

தாயின் மடியில்: 24-12-1932 இறைவன் அடியில்; 06-06-1993

திதி: 26-05-1994

துணிவாகி நின்ற எம் தூண் சரிந்ததால்
துயரத்தில் நாம் மூழ்கி தத்தளித்தோம்
உங்கள் இழப்பை நிரப்ப முடியாமல்
நித்தமும் கலங்கி நிற்கிறோம் ஐயா!

நித்தம் உங்கள் நினைவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

ந. மனோன்மணி,
இல. 55, இராசவீதி
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (31091)

இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் கீழ்வரும் மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

நடத்தும்

## கரும்புலிகள் நாளையொட்டிய அரங்க விழாவும் கிராமிய ஆட்டக் கலை விழாவும் விண்ணப்பப் படிவம்

1) பங்குபற்றும் அமைப்பின் பெயர்:
..........................................................
..........................................................

2) முகவரி:
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

3) கோட்டத்தின் பெயர்:
..........................................................
..........................................................

4) நாடகத்தின் தன்மை:
அ: ..........................................................
ஆ: ..........................................................
இ: ..........................................................
ஈ: ..........................................................

5) கிராமிய ஆட்டக்கலை:
அ: ..........................................................
ஆ: ..........................................................
இ: ..........................................................
ஈ: ..........................................................

இப்போட்டிகளின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

..........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி-8307)

## DIPLOMA IN NURSING
## தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

புதிய நெறி ஆரம்பம்:
**01-06-1994**

★ இலகு பயிற்சி நெறி
★ சிறந்த விரிவுரையாளர் குழு
★ விசேட செய்முறை வகுப்புக்கள்
★ இலவச ஆங்கில, பாடலி வகுப்புக்கள்

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 ST PETER'S LANE,
JAFFNA.

(இ-8317)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 25 — 07 — 1954 இறப்பு: 12 — 04 — 1994

### அமரர் தம்பிராசா அன்ரனி புஷ்பராசா

நாட்கள் 45 ஆனாலும் உமது நினைவு என்றும் எம்மை விட்டகலாது. இவருடைய ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று 26-05-1994 காலை 6-15மணிக்கு யாழ். அடைக்கல மாதா ஆலயத்தில்நினைவுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்;
தந்தை, தாய், சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்,

143/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/8327)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### டாக்டர் அ. வைத்தியலிங்கம்

(பாலாவோடை, காரைநகர்)

பிறப்பு: 09-02-1922 இறப்பு: 26-04-1994

கண்ணும் கருத்துமாய் எம்மைக்
காதலோடு காத்தவரே
மண்ணில் பெரும் புகழோடு
மதிக்க வைத்து வாழ்ந்தவரே
புண்ணியங்கள் பல செய்து
போற்ற வாழ்ந்து சென்றாயே!
எண்ண எண்ண எமதுள்ளம்
எரிய வைத்தேன் சென்றாயோ!

மனைவி, மக்கள், சுற்றத்தார்
மற்றுமுள்ள ஊரார்கள்
நினைத்துன் வைத்திய சேவைதனை
நெஞ்சில் வைத்துப் போற்றினரே
அனைவருக்கும் நல்லோனாய்
ஐயா! நீங்கள் வாழ்ந்தீரே!
தினமும் நாங்கள் மறக்கோமே
சிவபதமடைந்து வாழியவே!

ச. ஆ. சோமசுந்தரம்
குடும்பம்.
[பொட்டன்]

131, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். (31098)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வைத்திய கலாநிதி

### அமரர் அ. வைத்தியலிங்கம்

(இளைப்பாறிய S. H. S. நுவரெலியா)

பாலாவோடை, களபூமி, காரைநகர்.

கடந்த 26-04-94 சென்னையில் காலமான எமது சித்தப்பா டாக்டர் அ. வைத்தியலிங்கம் அவர்களின் 31ஆம்நாள் சிரார்த்த தினம் இன்று ஆகும். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காரைநகர், பாலாவோடை முத்துமாரி அம்பாளை பிரார்த்திக்கின்றோம். அத்துடன் அவரது பிரிவுச் செய்தியை பத்திரிகை விளம்பர மூலம் அறிந்து எமது இல்லத்திற்கு வந்து துக்கம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வே. சுப்பிரமணியம்,
வே. சரவணப்பெருமாள்.
(பெறாமக்கள்)

30/4, அரசடிப்பிள்ளையார் வீதி,
நாயன்மார் கட்டு,
யாழ்ப்பாணம். (சி/8329)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.


## செய்து காட்டுவாரா?

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற சிந்தனை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க வட்டாரங்களில் உதித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தமிழர்கள் மற்றும் சிறுபான்மையினரின் வாக்குகளுக்குச் செஞ்சிக்கொண்டிருக்காமல், சிங்களவர்களின் வாக்குகள் மூலமே தாம் மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று வாய் வேதாந்தம் பேசி வந்தவர் விஜேதுங்கா. ஆனால் சிறுபான்மையினரைப் புறக்கணித்து தாம் தேர்தலில் வெற்றி அடைய முடியாது என்ற யதார்த்தத்தை இப்போது புரிந்து கொண்டு விட்டார்!

தமது கட்சிக்குள் உண்டாகியிருக்கும் பூசல்களையும், மோதல்களையும் ஒருவாறு சரிக்கட்டிக் கொண்டு, தமது தலைமைத்துவத்தை உறுதி செய்தாலும் —

தென்னிலங்கை வாக்காளர்கள் பதினேழு வருட ஐ.தே.க. தொடர் ஆட்சி மீது வெறுப்படைந்து விட்டதால் —

சிறுபான்மையினரின் வாக்குகள் இல்லாமல் தேர்தலில் வெற்றி அடைவது என்பதனைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத நிலை — விஜேதுங்காவுக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கம் வடக்கு - கிழக்கில் நடத்தும் யுத்தம் பயனற்றது என்பதனையும், தமது வரிப்பணம் வீணாக யுத்தத்துக்குச் செலவிடப்படுகிறது என்பதனையும், போர்முனையில் சிங்கள இளைஞர்கள் அவமாகச் சாகிறார்கள் என்பதனையும் சிங்கள மக்கள் உணர்ந்து கொள்ளத் தொடங்கி விட்டதால் —

சிங்களவர்களின் வாக்குகளைப் பெறுவதற்குத் தானும் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு உண்டாகியுள்ளது.

தான் ஆட்சியில் இருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி, எதிர்க்கட்சியை முந்திக்கொண்டு, தேர்தலுக்கு முன்னரே இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டால், தமிழர்களின் வாக்குகளை மட்டுமன்றி சிங்களவர்களின் வாக்குகளையும் சேகரிக்க முடியும் என்று விஜேதுங்கா கணக்குப் போடலாம்.

எப்படியும் அவருக்கு வேண்டுவது ஜனாதிபதி பதவி. அதன் பொருட்டு கடந்த ஒரு வருடமாக இனப்பிரச்சினை விவகாரத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டை மாற்றுவதற்கு அவர் முனைவது ஒன்றும் வியப்புக்கு உரியதல்ல!

ஆனால் தன்னை சிங்கள பௌத்தர்களின் தலைவனாகக் காட்டிக்கொண்டு தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களை அடிமை நிலையிலேயே வைத்திருக்க வேண்டும் என்று நினைத்த ஒருவர் —

தேர்தல் வெற்றியை மட்டுமே இலக்காகக் கொண்டு மனம் மாறியதாகக் காட்டிக் கொண்டு முன்வைக்கும் தீர்வு —

தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான தீர்வாக இருக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இனப்பிரச்சினை நீதியான, நியாயமான முறையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்ற விருப்பம் ஜனாதிபதியினது அடிமனதிலிருந்தே வருவதாயின் —

அவர் அதனை நிரூபிக்கும் விதத்தில் எவ்வித நிபந்தனையும் இன்றி யுத்தத்தை நிறுத்தி, வடக்கு - கிழக்கில் இருந்து படையினரை முழுதாக வாபஸ்பெற்று, சமாதானத்துக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்து காட்டினால் மட்டுமே தமிழர்கள், இராணுவ அடக்குமுறை ஒழிந்துவிட்டது என்ற அனுபவத்துடன் விஜேதுங்காவையும், ஐ.தே.க. அரசையும் நம்பத் துணியலாம்; தங்கள் மீது தீர்வு ஒன்று திணிக்கப்படமாட்டாது என்பதை மனப்பூர்வமாக உணரவும் ஏதுவாகும்.

விஜேதுங்கா செய்து காட்டுவாரா?

# என் மனத்தில் ஆவேசப் புயலை ஏற்படுத்தியது 58 கலவரங்களே!

## 'வெளிச்சம்' சஞ்சிகைக்கு தலைவர் பிரபாகரன் பேட்டி

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் "வெளிச்சம்" மாத சஞ்சிகையின் வெள்ளி இதழுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அளித்த பேட்டி இது.

**இளம்பராயத்திலிருந்தே தாங்கள் பல்வேறு நூல்களை வாசித்து வருகின்றீர்கள். உங்களுக்குள் தமிழ்த்தேசிய உணர்வையும், ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டக்குணாம்சத்தையும் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்த நூல்களைப்பற்றி விவரித்துக் கூறமுடியுமா?**

சின்ன வயதிலிருந்தே நானொரு புத்தகப் பிரியன். எனது இளம் பராயத்தில் அதிக பொழுதுகள் நல்ல நூல்களுடனேயே கழிந்தன. அதிலும் சரித்திர நாவல்களையும், வரலாற்று நூல்களையும், வீர புருஷர்களின் வாழ்க்கைச் சரிதங்களையுமே நான் விரும்பிப் படித்தேன். கைச் செலவுக்காக என் வீட்டார் எனக்கு வழங்கிய பணத்தை எல்லாம் புத்தகங்கள் வாங்குவதிலேயே செலவிட்டேன். புதிய புதிய நூல்களை வாங்கிப் படிப்பதில் எனக்கு திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. எனது ஊரில் ஒரு புத்தகக் கடை இருந்தது. அங்கிருந்த அரிய நூல்களை எல்லாம் எப்படியும் வாங்கி வாசித்துவிடுவது எனது வழக்கமாக இருந்தது. அலெக்சாண்டர், நெப்போலியன் போன்றவர்களின் வீர வரலாற்றைஇப்படியான நூல்களின் மூலமே நான் அறிந்து கொண்டேன். இந்திய விடுதலைப் போராட்டத்தையும், அதற்கு தங்களையே தற்கொடையாக்கிய சுபாஸ் சந்திரபோஸ், பகத்சிங், பாலகெங்காதர திலகர் போன்றோரின் எனக்கு ஏற்பட்ட பற்றும், கரிசனையும் இந்த வாசிப்பின் விளைவுகள் தான். என் போராட்ட வாழ்வின் அத்திவாரம் இப்படியான புத்தகங்களின் வாசிப்பினால்தான் கட்டியெழுப்பப்பட்டது. இந்திய விடுதலைப் போரின்பால் எனக்குள் ஏற்பட்ட ஆர்வமும் அந்நிய ஆட்சியின் ஆதிக்க அடக்கு முறைக்கு எதிரான கொதிப்புணர்வும் இந்த வாசிப்புப் பழக்கத்தினாலேயே ஏற்பட்டன.

1958ஆம் ஆண்டு, இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரமும் ஈழத் தமிழினம் இந்தக் கலவரத்தினால் சந்தித்த இன்னல்களும் எனக்குள் ஏற்படுத்திய தாக்கங்களே என்னைப் போராடத் தூண்டின. அன்றாடம் நான் வாசித்தறிந்த செய்திகளே என்னில் ஒரு ஆவேசப் புயலை ஏற்படுத்தியது. தமிழகத்து எழுத்தாளர்களான கௌசியனின் "பாமினிப் பாவை", சாண்டில்யனின் "கடற்புறா" கல்கியின் "பொன்னியின் செல்வன்" போன்ற நாவல்களை நான் வாசித்தபோது, எமது மூதாதையோர் எப்படிப் பெரும் சாம்ராச்சியங்களை அமைத்து ஆட்சி புரிந்தார்கள் என்பதை அறிந்துகொண்டேன். திரும்பவும் எமது இனம் தலைநிமிர்ந்து, தன்னாட்சி பெற்று உலகத்திலேயே சிறப்பிக் ஆழ்ந்தும் விதமாக வாழவேண்டும் என்ற ஆர்வத்தை இந்த நூல்கள் என்னுள் ஏற்படுத்தின.

அடிமைத்தனத்திற்கு எதிராக ஏன் நாங்கள் ஆயுதமேந்திப் போராடக்கூடாதென்ற எண்ணத்தை இந்த நூல்கள் என் மனதில் எழுப்பின. மகாபாரதம், இராமாயணம் போன்ற காவியங்களை இளம் வயதில் நான் விரும்பி வாசித்தேன். அவையும் என்னுள் சில சிந்தனைத் தெறிப்புகளை ஏற்படுத்தின. 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற ஆழமான கருத்தை பகவத் கீதையை நான் வாசித்த போதே புரிந்து கொண்டேன். நல்வழி காட்டும் அறநெறிக் கதைகளை நான் வாசித்தபோது நல்லவனாகவும், ஒழுக்கசீலனாகவும் கட்டுப் பாடுடையவனாகவும், சமூகத்திற்கு நற்பணி செய்பவனாகவும் நான் வாழவேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு அறிவுறுத்தின. எல்லாவற்றுக்கும் மேலாக சுபாஸ் சந்திரபோஸின் வாழ்க்கையே எனக்கு ஆதர்ஸ ஒளியாக வழிகாட்டியது. அவரது ஒழுக்க வாழ்வும், நாட்டின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்த விதமும் எனக்கு வழிகாட்டியாக அமைந்தது. வசிக்கும்போது எனக்கு ஒரு வழக்கமிருந்தது. வெறும் மேற்போக்கான வாசிப்பாக இல்லாமல், வாசிக்கும் நூலுக்குள் ஆழ்ந்துபோகும் ஒரு தன்மையை நான் கொண்டிருந்தேன். நூல்களுடன் ஒன்றிப்போவேன். வாசித்து முடிந்ததும் ஏன்? எதற்கு? இப்படி ஏன் ஆனது? என்ற வினாக்கள் என்னில் எழும். அந்நூலின் கதையுடனும், பாத்திரங்களுடனும் எமது வாழ்க்கையையும், எம்மினத்தின் வாழ்க்கையையும் சேர்த்துப் பார்ப்பேன். அப்போதெல்லாம் என்னினத்தின் விடிவிற்காகப் போராட வேண்டும் என்ற எண்ணமே என்னுள் மேலோங்கி நிற்கும். சரித்திர, வரலாற்று நூல்களுடன், கலைக் கதிர் போன்ற விஞ்ஞான அறிவு நூல்களையும் நான் விரும்பி வாசிப்பேன். அறிவியல் ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் எனது இனமும் எனது மக்களும் வளர வேண்டும் என்று நான் அதிகம் விரும்பினேன். எமது மண் விடுதலைபெற்று, விஞ்ஞான ரீதியில் சாதனை படைக்க வேண்டும் என என்னுள் ஒரு கனவை வளர்த்துக் கொண்டேன். இந் நூல்கள் மூலம் பரந்த உலகப் பார்வை ஒன்று எனக்குள் விரிந்து கொண்டது. கற்பனையில் மட்டும் காலம் கழிக்காது செயல் ரீதியாக எதையவாறு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை என்மனதில் ஏற்படுத்தியது. எமது தமிழினத்திற்கு செயற்பாட்டுத் தன்மையே இனித் தேவையானது என்று நான் நம்பினேன். நான் வாசித்த விடுதலைப் போராட்ட நூல்கள் "ஒரு போராளி புனிதமானவனாகவும், தன்னலமற்றவனாகவும் மக்களுக்காக தன்னை அர்ப்பணிப்பவனாகவும் இருக்க வேண்டும்" என்ற செய்தியை என்னுள் தெரிவித்துக் கொண்டன, இப்படி நான் வாசித்த பல்வேறு நூல்கள் தான் என் இனத்திற்காக என்னைப் போராடத் தூண்டின!



தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன

**உங்கள் சிறு பராய வாழ்க்கை இன்றைய இளம் சந்ததியின் வாழ்வு நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்திருக்கும். அந்த இளம் பராய வாழ்க்கை பற்றி வெளிச்சத்துக்கு விபரிப்பீர்களா?**

சின்ன வயதில் என் வீட்டுக்கு நான் செல்லப்பிள்ளை. அதனால் எனக்கு வீட்டில் அதிக கட்டுப்பாடு இருந்தது. பெற்றோர்கள் என்னை வீட்டுக்கு வெளியே விடுவது அபூர்வம். அயல் வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே என் விளையாட்டுத் தோழர்கள். என் வீடு அயல்வீடு என்ற இவற்றைச் சுற்றியே என் உலகம் இருந்தது. தனித்த, அமைதியான வீடென்ற சுற்றுவட்டத்துக்குள்ளேயே என் சின்ன வயதின் வாழ்வு கழிந்தது.

எட்டாம் வகுப்பில் நான் படித்துக்கொண்டிருந்தபோது எனது ஊரான வல்வெட்டித்துறையில் "வல்வைக் கல்வி நிலையம்" என்ற கல்வி நிலையம் இயங்கிக்கொண்டிருந்தது. உயர் கல்வி கற்ற இளைஞர்கள் சிலர் தங்கள் ஊரை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் என் வீட்டுக்கு அயலிலிருந்த 'சிவகுரு வித்தியாசாலை' (ஆரம்ப பாடசாலை)யில் இந்த கல்வி நிலையத்தை நடத்திக்கொண்டிருந்தனர்.

இரவில் கீழ் வகுப்பைச் சேர்ந்த மாணவருக்கு "ரியூசன்" சொல்லிக்கொடுப்பதும் இக்கல்வி நிலையத்தின் பணியாக இருந்தது. எனது ஊரைச் சேர்ந்த தமிழ் ஆசிரியரான வேணுகோபால் அவர்கள் "தமிழர்கள் ஆயுதமேந்திப் போராடவேண்டும்" என்ற கருத்தை எமக்குப் போதிப்பார். இவர் தமிழரசுக் கட்சியின் இளைஞரணியின் தீவிர ஆதரவாளராக இருந்து பின்னர் அக்கட்சியின் "போராட்டம் தீவிரம் போதாது" என்று திரு. வி. நவரத்தினத்துடன் இணைந்து சுயாட்சிக் கழகத்தை உருவாக்கியவர்களில் ஒருவர். இவரே, எனக்கு ஆயுதப் போராட்டத்தின் தேவையையும், அதன் மீது நம்பிக்கையையும் ஏற்படுத்தியவர் ஆவார். எனது ஊர் இராணுவ அடக்குமுறையை தினசரி சந்திக்கும். இதனால் இராணுவத்தின் மீது சின்ன வயதிலேயே எனக்கு வெறுப்பு அதிகமானது. இத்துடன் சேர்ந்து ஆசிரியர் வேணுகோபால் அவர்கள் ஊட்டிய ஆயுதப்போராட்ட உணர்வும் விடுதலைத் தாகமும் என்னுள் ஒரு வேகத்தை ஏற்படுத்தின. நானும் என் வயதொத்த நண்பர்களும் இவருக்குப் பின்னால் திரிந்தோம்.

இப்படியெழுந்த விடுதலைத் தாகத்தால் எனது பதின்நான்காவது வயதில் எமது பாடசாலையில் விடுதலைக்காகப் போராட வேண்டும், இராணுவத்தினரைத் தாக்க வேண்டும் என்று நானும், என் உணர்வொத்த ஏழு இளைஞர்களும் சேர்ந்து பெயரில்லாத ஒரு இயக்கத்தை ஆரம்பித்தோம். நானே அவ்வியக்கத்தின் தலைவராக இருந்தேன். எங்களுக்கு அப்போதெல்லாம் ஆயுதமொன்று வாங்க வேண்டும், வெடிகுண்டொன்று செய்ய வேண்டும் என்ற உணர்வே மேலோங்கியிருந்தது. வீட்டில் கிடைக்கும் பணத்தில் வாரத்துக்கு இருபதைந்து சதத்தை இவர்கள் என்னிடம் தருவார்கள். நான் சேகரித்துக் கொள்ளுவேன். இப்படியாக நாற்பது ரூபா எங்களிடம் சேர்ந்துவிட்டது. இந்த நேரத்தில் எமது பக்கத்து ஊரில் இருந்த "சண்டியன்" ஒருவரிடம் நூற்றியம்பது ரூபாவுக்கு "ரிவோல்வர்" ஒன்று விற்பனைக்கு இருப்பதாக அறிந்தோம். எப்படியும் அந்த "ரிவோல்வரை" வாங்கிவிட வேண்டும் என்ற துடிப்பில் என் சகோதரியின் திருமணத்தின்போது எனக்கு அன்பளிப்பாகக் கிடைத்த மோதிரத்தை விற்று எழுபது ரூபா பெற்றுக் கொண்டோம். எல்லாமாக சேர்த்து எம்மிடம் நூற்றிப்பத்து ரூபா இருந்தபோது மிகுதிப்பணம் இல்லாத காரணத்தினால் இந்த "ரிவோல்வர்" வாங்கும் திட்டத்தை கைவிட நேர்ந்தது இப்படியாக என் இளம்பராயப் போராட்டம், விடுதலை, இனத்துக்காக ஏதையாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு, என்ற எண்ணங்களுடனேயே கழிந்தது. கழிந்தது என்று சொல்லுவதிலும் பார்க்க வளர்ந்தது என்று சொல்லுவதே பொருத்தமானது என்று நினைக்கின்றேன்.

நான் படிக்கும் காலத்தில் என்னொத்த மற்றவர்கள் எல்லாம் விளையாடிக்கொண்டிருப்பார்கள். நான் மட்டும் அகப்பட்ட மூலப்பொருள்களைக்கொண்டு வெடிகுண்டு செய்வதிலும் அதை வெடிக்கச் செய்வதிலுமே ஈடுபட்டுக்கொண்டிருந்தேன். நிச்சயமாக பதினான்கு வயதில் போராட வேண்டுமென்று நான் துடித்ததுடிப்பு இருக்கிறதே. அது இன்றைய என் வயதொத்த சிறுவர்களின் வாழ்க்கையிலிருந்து மாறுபட்டதாகவேயிருந்தது.

**எமது தேசத்தில் இன்று நிலவும் போராட்டச் சூழலில் கலை இலக்கியத்தின் பங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்.**

கலை, இலக்கியங்கள் இன்றைய போராட்ட வாழ்வை சித்தரிப்பதாக அமையவேண்டும். இன்றைய காலத்தை உருவகிப்பதாக அமையவேண்டும். இன்றைய வரலாற்றுப் போரை பதிவு செய்வதாக இருக்கவேண்டும்.

கலையும், இலக்கியமும் வாழ்க்கையை கருப்பொருளாகக்கொண்டவை. வாழ்க்கையைத் தரிசித்து நிற்பவை. வாழ்வனுபவத்தைக் குறியீடு செய்பவை. இன்று எமது வாழ்வும் வாழ்வனுபவமும், விடுதலை வேண்டிய ஒரு போராட்டத்துடன் பிணைந்து நிற்கிறது. இந்த போராட்ட சூழ்நிலையே எமது வாழ்வை நிர்ணயிப்பதாகவும் அமைந்துவிட்டது; எனவே, எமது கலை, இலக்கியங்கள் இந்தப் போராட்ட வாழ்வின் தன்மைகளை, அந்த வாழ்வில் பிறக்கும் ஆழமான அனுபவத்தழும்புகளை, உணர்வலைகளை சித்தரித்துக்காட்ட வேண்டும். அதேவேளை, விடுதலை என்ற உன்னதம் பற்றி விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதாக அமையும் பொழுது அவை சிறப்புப் பெறுகின்றன. மானுட விழுமியங்களை வலியுறுத்தி, மனித மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்ட படைப்புக்களே சாதனைகளை எட்டுகின்றன. தமிழீழ போராட்டச் சூழலில் இன்று மையம்கொண்டிருக்கும் இலக்கிய எழுச்சி எதிர்காலத்தில் அதியுன்னதமான ஆக்க இலக்கியங்களை படைத்து உச்சங்களைத் தொடும் என்று திடமாக நம்புகின்றேன்.

**எமது இயக்கத்தைச் சேர்ந்த இளம் போராளிகள் இன்று படைப்பாளிகளாக மாறிவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இவர்கள் இன்றைய போராட்டம் பற்றியும், போர்க்கள வாழ்வு பற்றியும் எழுதி வருகின்றனர். போர்க்கால இலக்கியத்துக்கு வளம்சேர்த்து வரும் இந்தப் புதிய கலை இலக்கியம் பற்றி தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**

தமிழீழத்தில் போர்க்கால இலக்கியம் வளர்ந்து வருகின்றது. எமது இளம் போராளிகள் பலர் படைப்பு இலக்கியத்தில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். சிலரிடம் தரம் வாய்ந்த எழுத்துக்களையும், கலைப் படைப்புக்களையும் அவதானிக்க முடிகின்றது. இது நல்லதொரு அறிகுறி. களப்போக்கின் அனுபவ முதிர்ச்சியில் எமது போராளிகளிடம் இருந்து சிறந்த கலை இலக்கியப் படைப்புக்களை எதிர்பார்க்கலாம். எமது போராளிகளே வரலாற்றின் கதாநாயகராக இருந்து காலத்தை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களே அந்தக் காலத்தைப் பதிவு செய்யும்போது அது உண்மையானதாகவும், உன்னதமானதாகவும் அமைந்து விடுகிறது.

தமிழனின் சரித்திரத்திலேயே இன்றைய காலம் ஒரு முக்கியமான யுகம், இன்றைய காலத்தில் கட்டவிழும் விடுதலை வரலாற்றை, கலை இலக்கியமாக உருவகப்படுத்தி அடுத்த தலைமுறையினரும் அறியச் செய்வது இன்றைய சிருஷ்டிகர்த்தாக்களின் முக்கிய கடமையாக நான் கருதுகின்றேன்.

போராட்டம் பற்றியும், போர்க்கள வாழ்வு பற்றியும் ஆழமான அனுபவத்தையும், தெளிவான பார்வையையும் கொண்டு வளர்வதால் எமது போராளிகள், சிறந்த படைப்பாளிகளாக மாறி, ஒரு காலம், உன்னதமான கலை இலக்கியங்களைப் படைப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. அதனால் தான் எமது இயக்கத்தில் முளைத்து வரும் இளம் எழுத்தாளர்களையும், கலையார்வம் கொண்டவர்களையும் நான் ஊக்குவித்து வருகின்றேன்.

**இப்போராட்டச் சூழலில் பாதிப்புக்குள்ளான சிறுவர் நலனில் நீங்கள் அதிக ஆர்வமும், அக்கறையும் காட்டி பல செயற்திட்டங்களையும் உருவாக்கி வருகின்றீர்கள் இந்த குழந்தைகளை அரவணைத்து, அவர்களின் எதிர்கால வாழ்வு சுபீட்சம் அடைய வேண்டும் என்று நீங்கள் விரும்புவதன் காரணம் என்ன?**

ஒரு நாட்டை கட்டியமைக்க நான் துடிக்கின்றேன். அதனையே எனது வாழ்க்கையின் இலட்சியமாக வரித்துக் கொண்டுள்ளேன். நாம் கட்டியெழுப்ப முனையும் இந்நாட்டுக்கு எதிர்கால சந்ததியே ஆதாரமானது எனவே நாட்டையமைப்பதோடு எதிர்கால சந்ததியையும் உயரிய பண்புகளுடனும் வளர்த்து எடுக்க வேண்டியது முக்கியமானதாக நான் கருதுகின்றேன். இதனால்தான் எதிர்கால சந்ததியை வளர்ப்பதில் அதிகளவு அக்கறை காட்டுகின்றேன். எமது நாட்டின் எதிர் கால சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரையை உருவாக்க வேண்டும் என்பதே எனது அவா. அறிவியல் ஆற்றல் மிகுந்தவர்களாக, தேசத்தின் பற்றுக் கொண்டவராக, நேர்மையும், கண்ணியமும், வீரமும், மானமும் உள்ளவர்களாக, போர்க்குணம் மிக்கவர்களாக இந்த புதிய பரம்பரை உருவாக வேண்டும்.

இந்தப் போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமிகளை நாம் அரவணைத்து வளர்த்து வருகின்றோம். இவர்களை நான் அநாதைகளாகவோ யாருமற்றவர்களாகவோ கருதவில்லை; இவர்கள் தமிழன்னையின் குழந்தைகள். இவர்கள் எம் மண்ணில் மலர்ந்துள்ள புஷ்பங்கள்; நாம் எமது மொழியையும், மண்ணையும் தாய்மொழியென்றும், தாய்மண்ணென்றும் அன்னை வடிவில் காண்பது போன்று இவர்களையும் எமது தேசியத் தாயின் பிள்ளைகளாகவே நான் கருதுகின்றேன்; இந்த சிறுவர்களை சிறப்பாக வளர்த்து எடுத்து அவர்களுக்கு செம்மையான கல்வியை ஊட்டி, எமது தேசத்தின் எதிர்கால சிற்பிகளாக உருவாக்குவது எமது தலையாய கடமையாக கருதுகிறேன். அதனால் தான் இவர்கள் மீது எனது விசேட கவனத்தைச் செலுத்துகின்றேன். ★

## அரசமைப்பு விவகார அமைச்சு ஒழிப்பு?

### சொக்ஸியின் பதவி பறிபோகலாம்

அரசமைப்பு விவகார அமைச்சை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அரசமைப்பு விவகார அமைச்சராக திரு. கே. என். சொக்ஸி இருந்து வருகிறார்.

இதேவேளை தேசியப்பட்டியல் எம். பிக்களைப் பதவி விலக வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதாகக் கூறப்படும் சில அமைச்சர்கள் மற்றும் அரச எம்.பிக்களின் நடவடிக்கைகள் குறித்து ஐ.தே.க. தலைமைப்பீடம் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்பு விவகார அமைச்சின் கடமைகளை நீதி அமைச்சினால் நிறைவேற்ற முடியும் என்று அமைச்சரவை வட்டாரங்களில் கருதப்படுகிறது. எனினும் இது விஷயமாக அரசத் தலைமைப்பீடம் இறுதி முடிவு எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## பூனையையும் நியமிக்கலாம் நாயையும் நியமிக்கலாம்

### டி. பிக்கே அதிகாரம் என்கிறார் அமிட்

நாடாளுமன்றத்தில் எவரையும் தேசியப் பட்டியல் மூலம் ஜனாதிபதி நியமிக்கப்படலாம். அது அவரது தனி உரிமை ஜனாதிபதி எனது இடத்துக்கு பூனையையும் நியமிக்கலாம்; நாயையும் நியமிக்கலாம். யாருக்கு கொடுக்க வேண்டும் என்று கூறுவது எனது வேலை அல்ல.

பதவி விலகிய தேசியப் பட்டியல் எம். பி. எம். எச் அமிட் 'சண்டேரைம்ஸுக்கு' அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார். "நான் 80 லட்சம் ரூபா பணம் வாங்கிக் கொண்டு தான் எம்பி பதவியை ராஜினாமாச் செய்ததாகக் கூறுகின்றார்கள் எனக்கு அஞ்சமே தரப்படவில்லை. நான் எட்டு சதங்களைக் கூடப்பெறவில்லை. சப்ரகமுவ ஆளுநர் நோயல் விமலசேன காலமானதை அடுத்து நான் ஜனாதிபதியைச் சந்தித்து, "ஆளுநர் பதவி தாருங்கள். எம். பி. பதவியை ராஜினாமாச் செய்கிறேன்" — என்று சொன்னேன் அது பற்றி ஒன்றுமே பிறகு இடம்பெறவில்லை — என்றும் அவர் கூறினார். (இ-எ)

## முதலாவது கணவர் கென்னடியின் கல்லறைக்கு அருகில் ஜாக்குலின் அடக்கம்

வாஷிங்டன், மே 25

புற்று நோய் காரணமாக மரணமடைந்த திருமதி ஜாக்குலின் கென்னடியின் உடல், அவரது முதல் கணவரான முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடியின் கல்லறைக்கு அருகில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

இது தொடர்பான நிகழ்ச்சி ஆர்லிங்டன் கல்லறையில் இடம் பெற்றது.

ஜோன் கென்னடியின் மறைவின்பின்னர் ஜாக்குலின் கிரேக்க கப்பல் அதிபர் அரிஸ்டோட்டல் ஒனாஸிஸை திருமணஞ் செய்திருந்தார். ஒனாஸிஸும் பின்னர் இறந்து போனார். (இ-எ)

### யாழ். மாநகரசபைப் பகுதியில்

## 2,000 நாய்களுக்கு நோய்த் தடுப்பு ஊசி

யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியின் பகுதியில் இரண்டாயிரம் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்க படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு தாக்குப் பிடித்து நிற்கக் கூடிய இத்தடுப்பு ஊசி மருந்தை எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக மீண்டும் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்திருக்கிறார்

இத்தடுப்பு ஊசி மருந்து யாழ் நகரசபைப் பகுதியில் 1993ஆம் ஆண்டு மே மாதத்தில் கடைசியாகப் போடப்பட்டது.

யாழ் மாநகரசபையிடம் பெற்ற லைசன்ஸ் இலக்கத் தகடுகளை உடைய நாய்களுக்கு மட்டுமே இத்தடுப்பு ஊசி இலவசமாகப் போடப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இத்திகதிக்கு முன்பதாக வளர்ப்பு நாய்களுக்கு மாநகரசபையிடம் லைசென்ஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (இ-எ-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### தோமஸ் அன்ரனி பெர்னாண்டோ
(ராசா)
(பெர்னான்டோ கிளாக்கர்)
மாதகல் - மண்டைதீவு

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மண்டைதீவில் வசித்தவருமான சம்பத்திரிசியார் கல்லூரி முன்னாள் லிகிதர் தோமஸ் அன்ரனி பெர்னாண்டோ அவர்கள் நேற்று (25-5-94) காலமானார்.

அன்னார் ஆகத்தம்மா (பேபி) யின் அன்புக் கணவரும், பிரான்சிஸ் (ஆசிரியர் - சம்பத்திரிசியார் கல்லூரி), அல்பேட் (விசுவமடு), கிறேஸ் (பிரான்ஸ்), பிலிப்ஸ் (கனடா), குயின்ரஸ் (கனடா), அருட்திரு பெனற் (பங்குத்தந்தை, சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிப்பொலிற்றா (ஆசிரியை, மண்டைதீவு றோ. க. வித்தியாலயம்), சசிகலா (விசுவமடு), ஞானசுந்தரம் (பிரான்ஸ்), றெஜினா [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜவான்சன், எமேசன், சோபியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பெ. பிரான்சீஸ்
(மகன்)
79, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[31113]

### சிவஞானம் பரமேஸ்வரன் (துரை)

சங்குவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலி தாவளயடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சிவஞானம் பரமேஸ்வரன் அவர்கள் 23-5-94 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவஞானம் புவனேஸ்வரியின் (சின்னம்மா) அன்பு மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தலிங்கச் செட்டியார் கமலாம்பிகையின் அன்பு மருமகனும், துரைச்சாமி - ஸ்ரீக்குமாரின் பாசமிகு தந்தையும், சண்முகநாதன், பாலேந்திரன், விக்கினேஸ்வரன், விஜயலட்சுமி, ராஜேஸ்வரி, தெய்வேந்திரம் ஆகியோரின் சகோதரரும், சீதாலட்சுமி, சிவமலர், இந்திரா, ஜெகநாதன், பத்மலோசன், குணலட்சுமி, காலஞ்சென்ற தம்பு துரைச்சாமி (புன்னாலைக் கட்டுவன்) சகலனும், திருமதி நாகராணி துரைச்சாமி, விஜயராஜா செட்டியார், காலஞ்சென்ற சபாலிங்கம் செட்டியாரின் மைத்துனரும், திருமதி ஸ்ரீரஞ்சனி திவாகரன், ஸ்ரீகாந்தன், ஸ்ரீரஞ்சன், நந்தினி, லதா, செல்வி, சந்தானம், தர்சினி, சறோஜினி, திருமதி சியாமளா இரட்ணசேகர், அருந்ததி, ஸ்ரீகரன், சுகந்தினி, ஜெயதீபன், ஜெயரூபன், அகிலன், வக்சிலா, துர்க்காதரன், பிரியதர்சினி, ஆகியோரின் பெரியதந்தையும், கல்யாணி, குமுதினி, க. திவாகரன் (கொழும்பு), இளங்கோவன், மங்கனேஸ்வரி சிவசுப்பிரமணியம் (அரியாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-5-94 செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
தாய், சகோதரர்கள், மாமி
சங்குவேலி, மானிப்பாய்.
(31109)

### செல்வி நிரஞ்சலா இராசநாயகம்

செல்வி நிரஞ்சலா இராசநாயகம் 25-05-94 இல் காலமாகிவிட்டார். அன்னார் வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவியும் கணக்கியல், கணக்கு ஆய்வு கற்கை நெறியில் பயின்று வருபவரும் இராசநாயகம் (பிரசித்த நொத்தாரிஸ்), விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மகளும், சாந்தமலரின் பெறாமகளும், வதிசலா, சர்மிலா, ராஜ்குமார் (நீகன்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 26-05-94 பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
S. S. இராசநாயகம்
(தந்தை)
91/8, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(31105)

### காசிப்பிள்ளை காங்கேசன்
'கோகுலம்', கொடிகாமம்)

ஓய்வு பெற்ற P. W. D. உத்தியோகத்தரும், துன்னாலை நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் Dr. கௌரிதேவி, கணேசராந்தன் (B. Sc.) காயத்திரி (கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகராஜா ஜெகதீசனின் அன்பு மாமனாரும், கீர்த்தனாவின் பேரனாரும், திருமதி தியாகராஜா, காந்திமதி, முன்னாள் புகையிரத பொறுப்பாளர் காராளபிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரனும் இந்திராணியின் மைத்துனரும், கலைச்செல்வன், கஜேந்திரனின் பெரியதந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-05-94 பிற்பகல் 4-00மணிக்கு கொடிகாமத்தில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி நி. காங்கேசன்:
''கோகுலம்,''
கொடிகாமம்.
(31097)

### அம்பிகாபதி பாலசுந்தரம்
(உள்ளகக் கணக்காய்வாளர்-நகரசபை · வவுனியா)

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வவுனியா நகர சபை உள்ளகக் கணக்காய்வாளரும் வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி மன்ற எழுதுவினைஞர் சங்கத் தலைவருமான அம்பிகாபதி பாலசுந்தரம் 22-05-94 இல் வவுனியாவில் காலமானார். அன்னார் விக்கினேஸ்வரியின் அன்புக்கணவரும், பாலசுரேஷ், அகிலன், பாலரேவதி, விஜயபாலினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார், அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23-05-94 இல் நடைபெற்று, வவுனியா நம்மைக்குளம் இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
மனைவி.
(கி-8234)

### மாணவருக்கான அறிவூட்டல் வகுப்பு

யாழ். கல்வித் திணைக்களமும், வலி. தெற்கு (உடுவில்) பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் அறிவூட்டல் வகுப்பு ஆரம்ப வைபவம் கடந்த புதன்கிழமை மகாஜனக் கல்லூரி... றோ. க. த. க. பாடசாலையில் அதிபர் திரு. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. எஸ். கே. எஸ். சிதம்பரநாதன், உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவபாதம், உடுவில் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு. சி. தேவராஜா, உதவி பங்குத்தந்தை அருட்திரு அந்தோனிப்பிள்ளை, ஞானப்பிரகாசர் சனசமூக நிலைய தலைவர் திரு. அல்பிரட் ஆகியோர் கலந்து உரையாற்றினார். (ஒ)

### இன்று

மானிப்பாய் இந்துவின் கலை, வர்த்தக மாணவர் மன்றத்தினர் ''வணிக சுரபி'' மலர் வெளியீட்டு விழாவை இன்று வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடத்த உள்ளனர். (ஒ)

### சுற்றுலா சென்ற மாணவன் காயம்

ஓடிக்கொண்டிருந்த மினி பஸ்ஸின் மிதி பலகையில் நின்றவர் வீதியில் உள்ள மின் கம்பத்துடன் மோதுண்டு தலையில் படுகாயமடைந்தார்.

மாணவர் குழு ஒன்று வடமராட்சிப் பகுதிக்கு சென்று சுற்றுலா முடித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளை பருத்தித்துறை ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

உரும்பராயில் இயங்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவனான ஈவினையைச் சேர்ந்த இராசரத்தினம் விஷ்ணுகரன் (17 வயது) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் சுயநினைவிழந்த நிலையில் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்தி வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இன்று பிற்பகல் 3.00 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

அத்தியார் இந்துவில்

★ 19 வயதுப் பிரிவு:- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா எதிர் சென் ஜோன்ஸ் மற்றும் அச்சுவேலி ம. வி. எதிர் நடேஸ்வரா.

முத்துத்தம்பி ம. வியில்

★ 17 வயதுப் பிரிவு:- கனகரத்தினம் ம. ம. வி. எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ ★ ★

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் இணுவிலிலுள்ள மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று மாலை 3 மணி முதல் நடைபெறும். இந்த ஆட்டங்களில் சித்திவிநாயகர் அணியை எதிர்த்து யங்ஹென்றீஸ் அணியும் பொற்பதி அணியை எதிர்த்து ஞானமுருகன் அணியும் மோதும்.

★ ★ ★

விபுலானந்தன் வெற்றிக் கேடயத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று இடம் பெறவிருக்கிறது.

மாலை 4.30 மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து பல்கலைக் கழக அணி மோதும்.

முன்னதாக பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் - 3 ஆம் இடத்தை பெறும் அணியைத் தெரிவு செய்யும் — ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து ஜொனி பஸ் சிகப்பு அணி மோதும்.

இந்த ஆட்டங்களுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் திரு. வி. தியாகராசா கலந்து கொள்வார்.

★ ★ ★

யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் சுற்றுப் போட்டிகளில் இன்று பிற்பகல் 3.30 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ மென்பந்து கிரிக்கெட்:- பேசும் மீன் வி. க எதிர் சுண்டுக்குளி பாரதி வி. க.

★ கரப்பந்தாட்டம்(ஓ. வர்):- சென் மேரிஸ் வி. க. எதிர் நல்லூர் வி. க.

### ஜூன்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பட்டுள்ளது அவரது சேவையை மாணவர் சமூகம் உணர வாய்ப்பு ஏற்படும் என்று — அவர் மேலும் தெரிவித்தார். மாணவர் எழுச்சி நாள் அன்று காலையில் பாடசாலைகள் தோறும் —

மாலையில் கோட்ட மட்டங்களிலும் நடைபெறும்.

அன்று காலை 8.30 மணிக்கு சகல பாடசாலைகளிலும் தேசியக் கொடி ஏற்றல், பாடசாலை கொடி ஏற்றல், மாணவர் எழுச்சிப்பண் இசைத்தல், எழுச்சி நாள் பற்றிய அதிபர்களின் விளக்கவுரை, கையெழுத்து நூல் வெளியீடு, விளைக்கோளை (சிரமதானம்) ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அன்று பிற்பகல் 2 மணிக்கு கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம் பெறும். (இ-3)

# இஸ்ரேல், தென்னாபிரிக்கப் பாணியில் இலங்கை அரசும் தீர்வு காணுமா?

கொழும்பு, மே 26

இஸ்ரேல் மற்றும் தென்னாபிரிக்காவில் இருந்து ஆயுதங்களைப் பெற்றுவந்த இலங்கை அரசு இன்று அந்நாடுகளின் துணிச்சலான அரசியல் நடவடிக்கைகளைப் பின்பற்றி இலங்கை இனப்பிரச்சினைக்கும் தீர்வுகாண முயலுவதே காலத்துக்கு ஏற்ற நடவடிக்கையாக அமைய முடியும்.

— கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றில் வெளியான கட்டுரையில் இவ்வாறு வலியுறுத்தப் ட்டுள்ளது.

கடந்த காலங்களில் இஸ்ரேலிய இராணுவ நிபுணர்களின் உதவி இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் நாடப்பட்டிருந்தது. குண்டு வீச்சு விமானங்களைச் செலுத்துவது மற்றும் நவீன தன்னியக்க ஆயுதங்களைக் கையாள்வது, தாக்குதல் வியூகங்களை அமைப்பது போன்ற துறைகளில் இஸ்ரேலிய நிபுணர்கள் இலங்கைப் படையினருக்குப் பயிற்சிகளை வழங்கியிருந்தனர்.

இதுதவிர தென்னாபிரிக்காவிடமிருந்து 'பவள்' கவச வாகனங்களை இலங்கை அரசு கொள்வனவு செய்திருந்தது.

தென்னாபிரிக்கப் படையினரின் பாவிப்பில் உள்ள முக்கிய இராணுவ சாதனமாக ''பவள்'' கவச வாகனங்கள் காணப்படுகின்றன. அண்மைக் காலம் வரை வெள்ளை இன ஆட்சியாளர்கள் கறுப்பினத்தவரின் போராட்டங்கள், கலவரங்களை அடக்க ''பவள்'' கவசவாகனங்களையே பயன்படுத்தியிருந்தனர்.

இலங்கைப் படையினரும் பவள் கவச வாகனங்களைப் பயன்படுத்தி வடக்கு கிழக்கில் யுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு இஸ்ரேலிய, தென்னாபிரிக்க உதவிகளுடன் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெறமுடியாத நிலையிலேயே இலங்கை அரசு இருந்து வருகிறது.

இலங்கைக்கு இராணுவ ரீதியாக உதவிகளை வழங்கிய நாடுகளான இஸ்ரேல், தென்னாபிரிக்கா ஆகியன தத்தமது பிரதேசங்களில் இனத் தகராற்றைத் தீர்ப்பதில் துணிச்சலுடன் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளன.

ஆனால் இலங்கையில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடைமுறைகள் காத்திரமற்ற இருப்புடன் ஆட்சியாளர்கள் இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி வருகின்றனர்.

இராணுவரீதியான அணுகுமுறைகளை இலங்கை அரசு முன்னெடுக்கலாம். ஆனால் அந்த அணுகுமுறை அநியாய உயிரிழப்புகளுக்கே வழிவகுக்கும் என்பதையே கடந்தகால அனுபவங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

— இவ்வாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிறிசேன கூரேயின் அமைச்சர் பதவி இந்தியாஸுக்கு?

கொழும்பு, மே 26

அமைச்சரவை மாற்றத்தின் போது புதிய வீடமைப்பு கட்டட நிர்மாண அமைச்சராக ஜனாப் இந்தியாஸ் பாக்கிர் மாக்கார் நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவர் வீடமைப்பு ராஜாங்க அமைச்சராக இருந்து வருகிறார்.

விரைவில் நடைபெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது, சிறிசேன கூரே வீடமைப்பு அமைச்சர் பதவியில் இருந்து அகற்றப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

### மெய்வல்லுநர் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மே, 26

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட — பதிவு செய்யப்பட்ட — கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் கழகங்களின் பொறுப்பாளர்களை தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் அது குறித்து பதிவு செய்யும் படியும் —

நாளை காலை 10 மணிக்கு யாழ். சுபாஸ் விடுதியில் இயங்கும் பிரதேச செயலகத்தில் இது தொடர்பாக நடைபெறும் கலந்துரையாடலில் பங்குபற்றும் படியும் —

வேலணை — ஊர்காவற்றுறை பிரதேச செயலரும் மேலதிக அரசாங்க அதிபருமான திருமதி ப. திலகநாயகம் போல் கேட்டுள்ளார். (உ-)

### ஜனாதிபதித்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தாமல் விட்டு விட்டு ஏனைய பிரதேசங்களில் அத்தேர்தலை நடத்தி முடிவுகளை அறிவிக்க சட்டத்தில் இடமில்லை.

1988 இல் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின்படி—

ஜனாதிபதித் தேர்தல் கட்டம் கட்டமாக நடத்தப்படலாம். சச்சரவுகள் உள்ள இடங்களில் தேர்தல்களை ஒத்திவைக்கவும் முடியும்.

எனினும் தேர்தல் ஒத்திவைக்கப்படும் இடங்களில், பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் தேர்தலை நடத்தியாக வேண்டும்.

கலவரம் உள்ள பகுதிகளில் தேர்தலை நடத்த இன்னொரு திகதியை அரச வர்த்தமானி மூலம் தேர்தல் ஆணையாளர் அறிவிக்க சட்டம் இடமளிக்கின்றது

எனினும் அத்தகைய கலவரப் பகுதிகளில் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் — தேர்தல் முடிவுற்ற மாவட்டங்களில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப் படக் கூடாது என்றும் அச்சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டங்களில் திருத்தம் கொண்டுவராமல் ஜனாதிபதித் தேர்தலை நடத்தமுடியாத நிலையே அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை.

எனவே —

தேவையான சட்டத் திருத்தத்தை சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படாமல் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற உயர் நீதிமன்றம் அனுமதிக்குமா? உயர் நீதிமன்றம் அனுமதித்தாலும் நாடாளுமன்றத்தில் அச்சட்டத்திருத்தத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிடைக்க எதிரணிகள் ஒத்துழைக்குமா? —என்று இப்போது கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது

நாட்டின் ஒரு பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் விட்டு விட்டு, எஞ்சிய பகுதியில் அத்தேர்தலை நடத்தி முடிவை அறிவிக்கும் சட்டத்திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்தால் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலை இம்முறை அரசு நடத்த முடியும் என்று சுட்டிக்காட்டப் படுகிறது. (உ-எ)

### வடக்கில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இந்தியாவுடன் நல்ல உறவை பேணிவரும் காமினி திஸநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சிக்கு முக்கியமானவராகுகின்றார் என்று சிலர் கருதுவதாகவும் அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் 1988 இறுதிப் பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்தில் நடத்தப்பட்டது என்பது தெரிந்ததே. (உ-எ)

### அரசுக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
புள்ளன. இது போன்ற பிரசாரங்களில் பி. பி. ஸி, வெரித்தாஸ் மற்றும் பல உலக வானொலிச் சேவைகளும் ஈடுபட்டுள்ளன.

''இப்பிரசாரங்களுக்கு பதிலாக தினமும் அரசின் நிலைப்பாட்டை விளக்கும் செய்திக் குறிப்புகளை உத்தியோகப் பற்றற்ற முறையில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பாக உடனடியாகச் செயல்பட வேண்டும் அவசரமாக இப் பணியை மேற்கொள்ள வேண்டும்''

இவ்வாறு ஜனாதிபதி தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

புதிய பிரசார உத்திதிட்டத்துடன் தம்மை இவ்வாரம் சந்திக்கும்படியும் அமைச்சரை ஜனாதிபதி தமது கடிதத்தின் மூலம் கேட்டுள்ளார்.

### வடமராட்சி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்டது.

குடத்தனை, நாகர்கோவில், மணற்காடு பகுதிகளில் தாக்குதல் தொடர்ந்ததால், அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பீதியடைந்து வேறு இடங்களுக்குச் சென்றனர் என்று அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

சேத விவரங்கள் குறித்து விரிவான செய்தி ஏதும் நேற்று நள்ளிரவு வரை கிடைக்கவில்லை. (ஒ-15)

### நான் ஐ. தே. கவில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பார்த்தால் நானும் நீங்களும் எம் மாத்திரம்? காமினி ஐக்கிய தேசியக் கட்சியில் இன்னும் பல சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

காமினியைப் போன்ற துணிச்சல் எனக்கு இல்லை நான் வேறு ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவன். அந்த வர்க்கத்தினர் மத்தியில் நான் இப்போது மகிழ்ச்சியாக உள்ளேன்.' என்றும் அவர் சொன்னார்.

''வடமேல் மாகாண சபை மற்றும் மேல் மாகாண சபை ஆகியவற்றை ஆட்சி செய்யும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி-ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கூட்டு, காமினி திஸநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சி எம். பியாக நியமிக்கப் பட்டதால் உடைய வேண்டியதில்லை''— என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

### ஆளும் கட்சி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வினர் நடவடிக்கை எடுத்து வருவதைத் தொடர்ந்து ஏற்பட்ட இப்பிளவு இப்போது விரிவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் கட்டுப்பாட்டைத் தமது கைக்குள் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரிவினர் எடுத்துவரும் நடவடிக்கைகள், ஆச்சிரேஷ் அமைச்சரின் நெருங்கிய சக அமைச்சர்கள் மற்றும் எம். பிக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)


## எமது புதிய வெளியீடு

T. ராஜேந்தர், கௌதமி, சிலம்பரசன்
ஒரு வசந்த கீதம்

### வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.
(31106)


## கண்ணீர் அஞ்சலி

யாழ் / கோப்பாய் ஆசிரிய கலாசாலை
ஆசிரிய மாணவி
செல்வி. கா. காயித்திரிதேவி
அவர்களின் தந்தையார்

### திரு. சி. சி. கா. காங்கேயன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை கண்ணீர் அஞ்சலி ஆக்குகின்றோம்.

ஆசிரிய மாணவர்
(31112) ஆசிரிய கலாசாலை. கோப்பாய்

## மரண அறிவித்தல்கள்

### அம்பிகாபதி பாலசுந்தரம்
(உள்ளகக் கணக்காய்வாளர், வவுனியா)

தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த அம்பிகாபதி பாலசுந்தரம் அவர்கள் 22-5-94 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ஜெகதாம்பிகை
(சகோதரி)
சாதகக்கட்டை,
தும்பளை,
பருத்தித்துறை.
(31111)

### திருமதி பவளரட்ணம் கிருஷ்ணபிள்ளை

உரும்பிராய் தெற்கு உரும்பிராயைச் சேர்ந்த திருமதி பவளரட்ணம் கிருஷ்ணபிள்ளை நேற்று (25-05-1994) காலமானார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நேற்று (25-05-1994) அவரது உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று, உரும்பிராய் தெற்கு மயானத்தில் அன்று மாலை தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஈசன் கிருஷ்ணா
(EASAN KRISHNA)
(மகன்)
உரும்பிராய் தெற்கு,
உரும்பராய்.
(கி-8131)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 203/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26-05-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org